அணா ஒண்ணேகால் UDUMALAI BEERANGI. டெலிபோன் 2597

எல்லாவரும் இன்புற்றிருக்க வேண்டும்

உடுமலை பீரங்கி

ஆசிரியர் உடுமலை R. இரங்கநாதன்

வெடி 1.] 8-பக்கங்கள் சென்னை, சனிக்கிழமை 12-3-1949 விலை 1¼ அணா சிலோன் 12 சதம் [குண்டு

கேள்வி கேட்கிறார் கேள்வி!

—ப. இளங்கீரன்—

"என்னப்பா?! நெற்பயிரை செழிப்பாக வளர்த்து நல்ல விளைச்சல் காணும்படி செய்கிறேன் என்று கூறிக்கொண்டு பயிருக்கு இடையேயுள்ள புல் பூண்டுகளை எல்லாம் பிடுங்கி எறிந்துக் கொண்டிருக்கிறாயே? அதன்மேல் உனக்கு ஏனப்பா "துவேஷம்"? என்று ஒருவன் கேட்டால் அவனை என்னவென்று கூறுவது?

"என்னப்பா? உன் வயலுக்கும் மாந்தோப்புக்கும் இடையே ஓர் ஒற்றடிப்பாதை போடுகிறேன் என்று சொல்லிக்கொண்டு பாதைக்குப் பக்கத்திலே உள்ள பாம்புப் புற்றைத் தகர்த்து நல்லரவங்களை நாசமாக்கிக் கொண்டிருக்கிறாயே அதன்மீது உனக்கு என்னப்பா கோபம்?" என்று ஒருவன் கேட்டால் அவனைப் பற்றி என்ன கூறுவது?

"சரியான ஆளைய்யா நீர்! கிணறு வெட்டுகிறேன் என்று கூறிக்கொண்டு வெட்டிய கிணற்றின் இடையிலே தோன்றிய கற்பாறைகளை எல்லாம் வெடி மருந்து வைத்து பிளந்துக் கொண்டிருக்கிறீரே? அந்தப் பாறை மீது உமக்கு என்ன வெறுப்பு?" என்று ஒருவன் கேட்டால் அவனைப்பற்றி என்ன நினைப்பது?

"வெள்ளைக்காரன் நம் நாட்டை அடிமைப்படுத்தி ஆதிக்கம் செலுத்திக்கொண்டிருக்கிறான். ஆகவே நாம் அவனை விரட்டி நம் அடிமைத் தளையை நீக்கி சுதந்திர மக்களாக வாழ வேண்டும் என்று கூறுகிறீர்கள். மிகவும் பொருத்தம் தான். வரவேற்கிறேன். ஆனால் வெள்ளைக்காரன்கள் இந்தியாவில் எல்லா பெரிய உத்தியோகங்களையும் கைப்பற்றிக் கொண்டு நமக்கு வேலையும் அதிகாரமும் இல்லாமல் செய்கிறார்கள். வாணிபத் துறையிலிருந்து அரசியல் துறைவரையில் அவர்கள் நம்மைச் சுரண்டி ஓட்டாண்டி ஆக்கிவிட்டு அவர்கள்மட்டும் இரப்பர் பலூன்களைப் போல் உப்பிக்கொண்டு போகிறார்களே. நம் நாட்டு தங்கப்பாளங்கள் நாள்தோறும் கப்பலேறி கடல்கடந்து போய்க் கொண்டிருக்கிறதே இந்த ஆங்கிலேயர்கள் யார்? இந்த நாட்டுக்கு சொந்தக்காரர்களா? கொடுங்கோலர்கள்! எழுத்துரிமை தராத எத்தர்கள்! பேச்சுரிமை பறிக்கும் பாதகர்கள்! வெள்ளைக் குஷ்டரோகிகளைப் போன்ற நீசர்கள். ஆங்கிலமா! சேசே! அது நீச்சமொழியாயிற்றே. வெட்கங்கெட்ட வெள்ளைக் கொக்குகள் அல்லவா அவர்கள்? நம் இந்திய மக்கள் முப்பத்து கோடிப்பேரும் மூச்சு விட்டாலே பறந்துபோய் இங்கிலாந்தில் விழுவார்களே அந்த அயோக்கியர்கள். என்றெல்லாம் அவர்கள் குற்றத்தை எடுத்துச் சொல்வது நல்லதாமோ? சுதந்தரம் பெறவேண்டியதுதான். ஆனால் அவர்களை அப்படியெல்லாம் தாக்கிப் பேசலாமா? அவர்கள் மேல் உனக்கு எதற்காகப்பா வீண் விரோதம்" என்று ஒருவன் கேட்டால் அவன் மூளையில் கோளாறு இல்லை என்று கூறாமலிருக்கமுடியுமா?

ஐயா ஏழைகளாச்சே நாங்கள்!



ஒருபுரம் மாகாண சர்க்கார் வரி; மற்றொருபுரம் மத்திய சர்க்கார் வரி. இவ்விரண்டுக்கும் இடையே கிடைத்துத் தினறும் ஏழை உயிர்ப் பிச்சை கேட்காமல் வேறென்ன செய்ய முடியும்? எல்லாம் நன்மைக்கே. மந்திரிகள் தான் என்ன செய்வார்கள்? அவர்களா சொன்னார்கள்? இல்லவே இல்லை. எல்லாம் அவன் செயலப்பா அவன் செயல். ஜன......கண......மண....!!!

"இந்நாட்டு பழங்குடி மக்களாகிய திராவிடர்கள் ஏன் சூத்திரர்கள் ஆனார்கள்? அரசாண்ட திராவிட இனம் ஏன் அடிமைப் பட்டது? ஆகவே மறுபடியும் நாங்கள் தலைதூக்கி நின்று திராவிட நாடு பெற்று எங்கள் மொழியை அரசவையிலே திகழச் செய்து ஜாதி முறையற்ற நல்லாட்சி அமைக்கப்போகிறோம். வடநாட்டுச் சுரண்டலை ஒழிக்கப் போகிறோம்" என்று கூறுகிறீர்கள். நாங்கள் தடை செய்யவில்லை. பேஷாகச் செய்து கொள்ளுங்கள். ஆனால் நீங்கள் ஏன் பிராமணர்களையும் வேத சாஸ்திரங்களையும் மனு தர்மத்தையும் கடவுளையும் பழித்துப் பேசுகிறீர்கள்" என்று கேட்டால் அவனைப் பற்றி என்ன நினைப்பது? அவனுடைய மூளையிலே மூடுபனி படர்ந்திருக்கிறது என்றுதானே பொருள்?

உழவனுக்கு நெற்பயிரை நன்றாக வளரச் செய்து நல்லபயனை அடைவதுதான் அவனது குறிக்கோள் என்றாலும், பயிருக்குத் தடையாக இருக்கும் புற்பூண்டுகளை களைவதிலே தவறென்ன இருக்க முடியும்? அதைவிட்டு அவனுக்கு புற்கள்மீது "துவேஷம் என்று கூறிவிட முடியுமா? அதே முறையில், மாந்தோப்புக்கும் வயலுக்கும் பாதை அமைக்கிற நேரத்தில் பாதைக்குப் பக்கத்தில் பாம்பு புற்று இருந்தால் போகிறவர்களைக் கடித்து உயிருக்கு உலைவைக்கும். பாம்புப் புற்றை அழிப்பதிலே-தவறென்ன? கிணறு வெட்டி நல்ல நீரை அடைவதுதான் அவனுடைய முயற்சி என்றாலும், தண்ணீர் ஊற்றுக்குத் தடையாக இருக்கும் பாறை இருந்தால் அதைத் தகர்க்காமல் வேறென்ன செய்ய முடியும்? அதனால் அவனுக்கு பாறைமீது "துவேஷமா"

வெள்ளைக்காரனின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு இந்திய மக்கள் சுதந்தரமடைந்து நல்லாட்சி அமைப்பதுதான் மக்களின்குறிக்கோள் என்றாலும், மக்கள் வெள்ளையனின் ஆட்சியை வெறுக்க வேண்டியதற்கான காரணம் கேட்டார்கள். அந்த நேரத்தில் வெள்ளையனின் ஆதிக்க வெறியையும் வாணிபச் சுரண்டலையும், பேச்சுரிமை எழுத்துரிமையற்ற அடக்கு முறை ஆட்சியின் போக்கையும் இன்னோரன்னபிற காரணங்களையும் காட்டவில்லையா? அதை ஆங்கிலேயர்கள் மேல் "துவேஷம் என்றுகூறிவிட முடியுமா?

அதே நிலையில்தான் திராவிட கழகம், திராவிடர் நிலைஉயர, திராவிடநாடு பெற, திராவிடரின் சூத்திரத் தன்மை நீங்க அன்னியரின் சுரண்டல் ஒழிய, தமிழ்மொழி அரியனை ஏற, திராவிட[illegible] அமைய க[illegible] தன் குறிக்கோளாகக் கொண்டிருக்கிறதே ஒழிய, மற்றவர்களைத் தூற்றவோ அல்லது வெறுத்துத் தூரத்தவோ எண்ணங்கொண்டிருக்கவில்லை. அது கழகத்தின் திட்டமும் அல்ல. ஆனால் கழகத்தின் கொள்கைக்கு விரோதமாக ஊறுதேடும் தடைகள் ஏற்படும்போது அதை எதிர்க்காமல் இருக்கமுடியுமா?

4-ம் பக்கம் பார்க்க

தனித் திராவிடர் ஆட்சி நிறுவவேண்டும்

எஸ். என். விவேகன்

(வடநாட்டுத் தொடர்பு வேண்டாம்)

இன்னாட்டுடன் வடநாட்டிற்கு இருக்கும் தொடர்பு அறுபட வேண்டும். இன்னாடு வடநாட்டிற்கு என்றும் அடிமையாகவே இருக்க வேண்டும் என்றுதான் வடநாட்டுத் தலைவர்கள் பெரிதும் பாடுபடுகின்றனர். அது மட்டுமல்லாமல் பொருளாதாரத் துறையிலும் வடநாட்டின் தொடர்பு கூடாது என்கிறோம். வடநாடு தென்னாட்டை சுரண்டுகிறது. தென்னாட்டின் பணம் வடநாட்டில் சென்று இரும்புப் பெட்டியில் தூங்குகின்றது. இன்னாட்டின் வாணிபம் பெரிதும் வடநாட்டார் கையிலுள்ளது. வைர வியாபாரத்திற்கு இங்கு ஒரு சுராஜ்மல்ஸ், பவுனுக்கு பாபாலால், ஸ்டோர்சுக்கு குப்தா ஸ்டோர்ஸ், இரும்புக்கு டாடா, கப்பல் கட்ட லால் சந்த், ஹீரா சந்த், மோட்டாருக்கு பிர்லா, துணிக்குச் செல்லாராம், பத்திரிகைக்கு கோயங்கா, காபி கிளப்பிற்கு ஆரியபவான், இம்மாதிரி எல்லா வாணிபத்திற்கும் வடநாடு. இந்நாட்டிலுள்ள பாங்குகள் அநேகம் வடநாட்டாருடையது. பாரத் பாங்கு இங்கே அதற்குக் கோடிக்கணக்கான ரூபாய் லாபம். காம்சந்த் நினைத்தால் இங்கே ஒரு தொழிற்சாலை நடத்தலாம். ஆனால் நமது ஜி. டி. நாயுடு இங்கே ஒரு தொழில் நடத்த அனுமதி கிடையாது.

வடநாட்டார் இங்கு வந்து வட்டிக் கடை வைக்கிறார்கள் இங்குள்ள பணம் சேமிப்பு நிதியாக, பாங்குகளின் வழியாக ஏராளப் பொருள் வடநாடு செல்வதோடு மட்டுமல்லாமல் தொழில் காரணமாகவும் வடநாடு செல்கிறது நம் நாட்டுச் செல்வங்கள். வியாபாரத்துறையில் வடநாட்டையும் நம் நாட்டையும் ஒப்பிட்டுப் பாருங்கள்.

பெரிய இரும்பு ஆலைகள் வடநாட்டில். 69.

நம் திராவிட நாட்டில் 9

சிமிண்ட் உற்பத்தி ஆலைகள் வடநாட்டில். 39.

நம் திராவிடநாட்டில். 2

ரயில்வே சாமான் செய்யும் ஆலைகள் வடநாட்டில். 141

நம் திராவிடநாட்டில், 24.

பொது என்ஜின் சாலைகள் வடநாட்டில். 305

நம் திராவிடநாட்டில். 21

பருத்தி நூல் நூற்கும் ஆலைகள் வடநாட்டில். 874.

நம் திராவிடநாட்டில். 49.

சர்க்கரை ஆலைகள் வடநாட்டில். 161.

நம் திராவிடநாட்டில். 14.

மின்சார உற்பத்தி இடங்கள் வடநாட்டில். 58.

நம் திராவிடநாட்டில்: 4.

நிலைமை இப்படியிருக்கும்போது திராவிடநாட்டின் பொருள்வளம் எப்படி மிகுதியாக முடியும்? தென்னாட்டை வடநாடு சுரண்டுவதற்கு உதவியாகத்தான் வடநாட்டு காங்கிரஸ் பாடுபட்டு வருகிறது. ஆகவேதான் வடநாட்டு தொடர்பு நமக்கு வேண்டாம் என்று கூறுகிறோம்.

(புராண ஆபாசமும் அதனால் மக்களுக்கு ஏற்படும்தீமையும்)

இன்று வழக்கத்திலும், கதைகளிலும், புராணங்களிலும், கோவிலில் உள்ள சிவனுக்கு லிங்கம் என்று பெயர் கூறப்படுகிறது. லிங்கம் என்றால் என்ன பொருள்? அதனை எழுதவும் கை கூசுகிறது. அகராதியை புரட்டிப்பாருங்கள் (லிங்கம் என்றால் ஆண்குறி என்று பொருள் கூறும்) லிங்கம் ஏற்பட்டதிற்கு பல கதைகள் உண்டு; அவற்றில் ஒன்றை இங்கே குறிப்பிடுகிறேன். தாருகா வனத்திலிருந்த ரிஷிபத்தினிகளின்மேல் மோகங்கொண்டு அப்பெண்களை கற்பழித்தாராம் சிவன். பின்பு இதை யறிந்த ரிஷிகள் கோபம் கொண்டு சிவனைப்பார்த்து 'பிடிசாபம்' என்றனர். என்ன சாபம் கொடுத்தனர் தெரியுமா? தங்கள் பத்தினிமாரை கற்பழிக்க சிவனின் எந்த உருப்பு காரணமாயிருந்ததோ அந்த உறுப்பு கீழே அறுந்து விழக் கடவது என்று சபித்தனராம். சாபமும் நிறைவேறியது. சிவனது ஆண்குறி அறுந்து கீழே விழவருகிறது! பார்த்தார் மகாவிஷ்ணு அவருடைய வேலை சிவனுக்கு ஆபத்து வந்தால் காப்பதல்லவா? சிவனது ஆண்குறி பூமியில் விழுந்தால் பூமியே அழிந்து விடும் என்று கருதி அதைத்தாங்குவதற்கேற்ற (பெண்குறி) வடிவங்கொண்டு தாங்கிறாராம் இதுதான் புண்ணிய புராணம் கூறும் வரலாறு. இந்த உருவந்தானே இன்று கோவிலில் காணப்படும் லிங்கம்! அறிவுடைய மனிதன் இதை வணங்குவானா? வணங்கலாமா? இதையும் ஆரியம் கடவுட் தன்மை என்று கூறி காணிக்கைப்பெற்று வாழ்கிறதே இது அறிவுடைமையாகுமா? முஷ்ணம் என்ற பெயர் வந்த காரணத்தை கேட்டால். அங்கு தான் இரணியன் சகோதரன் பூமியை பாயாக சுருட்டி எடுத்துக்கொண்டு பாதாள உலகத்திறகுச் சென்றதை அறிந்து மகாவிஷ்ணு, வராக (பன்றி) அவதாரமெடுத்து பூமியைக் குடைந்து பாதாள உலகத்திற்குச் செல்ல முகத்தை மூட்டிய இடமாம். ஆகவே அந்த இடத்திற்கு திருமுட்டம் என்று பெயரிடப்பட்டதாம். அங்குள்ள ஆண்டவனுக்கு பூவராகவப் பெருமாளாம். அவருக்கு வைத்துப் பூஜை செய்யப் படுவது கோறைக்கிழங்காம். கோறைக் கிழங்கை வைத்துப் பூஜிக்கப்படுவது ஏன்என்றால்? பன்றிக்குப் பிரியமானது கோறைக் கிழங்காம் ஆகவேதான் கோறைக் கிழங்கை வைத்துப் பூஜிக்கிறோம் என்று கூறுகின்றனர். நான் கேட்கிறேன் பன்றிக்குப் பிரியமானது கோறைக்கிழங்கு ஒன்றுதானா? வேறொன்றையும் அது விரும்பித் தின்பதில்லையா? பன்றிக்குப் பிரியமானது வேறொன்று இருக்கிறதே! அது கிடைப்பதுவும் வெகு சுலபமாயிற்றே!! அதையும் வைத்து பூஜித்தால் என்ன? இயற்பகை நாயனார் கதையை எடுத்துக் கொள்ளுங்கள். இயற்பகைநாயனார் என்பவர் ஈசனடியார் எதுகேட்டாலும் இல்லையென்னாது கொடுக்க கூடியவராம். அவரை சோதிப்பதற்காக அவரிடம் சிவன் மாறுவேடத்துடன் சென்று இல்லக்கிழத்தியை தானமாகக் கேட்டுப் பெற்றாராம். சிறுத்தொண்டர் என்பவர் சிவனடியாருக்கு விருந்திட்ட பின்பு தான் உணவு உட்கொள்வது என்ற வைராக்கியம் கொண்டவராம் அவரிடம் சிவன்' பிள்ளையை கறிசமைத்து கொடுத்தால்தான் உணவு உட்கொள்வேன் என்றாராம் அதன்படி சிறுத்தொண்டன் தன் பிள்ளையை கறி சமைத்துக்கொடுத்தாராம். இல்லக்கிழத்தியை கேட்பவர் ஈசனாவாரா? சிசுக்கறி கேட்பவர் சிவனாவாரா? இப்படிப்பட்ட புராணக் கதைகளெல்லாம் மக்களை நல்வழிப்படுத்துமா? ஒரு சில பழமை விரும்பிகளும், ஆரியத்தின் அடிவருடிவருபவர்களும், காலையிலெழுந்து கங்கையில் குளித்து கல்லுப்பிள்ளையார் முன் கசரத் எடுக்கும் பேர்வழிகளும். கூறுகின்றனர். இக்கதைகள் உலகியல்களை கடந்த பெரியார்களைப்பற்றி கூறுவது. ஆகவே அதில் தவறு காண்பதுதகாது என்று. வைதீகம் கூறுகிறது. அப்படி உலக ஆசாபாசங்களைக் கடந்தவர்களானால் இவ்வுலகத்தில் அவர்களுக்கு உரிமையோ உணர்ச்சியோ இருக்க முடியுமா? முடியாது. அப்படி உரிமையற்று உலகியல்களை கடந்து நின்ற இயற்பகைநாயனாருக்குஅவர் மனைவி என்று சொல்லப்பட்ட வரிடத்திலும் சிறுத்தொண்டனாருக்கு அவர் மைந்தனிடத்தில் இருக்க வேண்டிய குழந்தைப் பாசம் இருக்கமுடியாது. அப்படி உரிமையற்று உலகியல்களைக் கடந்து நின்ற இயற்பகை நாயனாருக்கு மனைவியை 'மகேஸ்வர'னுக்குக் கொடுக்கவும். சிறுத்தொண்டனார் மகனைசிவனுக்குக் கறிசமைத்துக் கொடுக்கவும் இவர்களுக்கு இவ்வுலகில் உரிமை மட்டும் எப்படிவந்தது? பழைய ஆரியக்கொள்கைப்படி கணவனுக்கு மனைவியும் தகப்பனுக்குப் பிள்ளையும் அடிமைப்பட்டவர்கள். என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்று கூறினாலும், கணவனுக்கு மனைவியை அடிமைப்படுத்தப்பட்டிருக்கிறது. இக்கதைகளைப் படிக்கும் மக்க்ளுக்கு என்ன தோன்றும் அந்தக்காலத்திலேயே கணவனுக்கு மனைவி அடிமைப்பட்டவள் என்று தானே கூறப்படுகிறது.நாம் மட்டும் எப்படி பெண்ணுக்கு சம உரிமை அளிக்கலாம்?. அளிக்கக்கூடாது என்று தானேதோன்றும். ஆகவே தான் இது போன்ற பழைய ஆரியக் கொள்கைகளையும் ஆபாசக் கருத்துக்களையும் மக்களுக்குப் புகட்டி மக்களை மாக்களாகச் செய்யும் புராண இதிகாசங்கள் தேவையில்லை. ஆகவே அவற்றையெல்லாம் தீயிலிட்டுக் கொளுத்துங்கள் என்று கூறுகிறோம்.

(தனித்திராவிட அரசு ஏற்பட்டால்)

திராவிடநாடு திராவிடருக்கானால் இவற்றை யெல்லாம் தடுக்கலாம், அப்பொழுது அரசியலமைப்பு இடந்தரும். நாடு நம்முடையதானால் நம் தந்தை **பெரியார்** கூறுவது போல் வடநாட்டார் அனுமதிச்சீட்டுப் பெற்றுத்தான் திராவிடநாட்டில் நுழையவேண்டும் என்று சட்டமியற்றலாம். சென்னை 'பீச்' ரோட்டிலுள்ள பாங்கிகள் தென்னாட்டார்களுடையவையாக முடியும். வடநாட்டிலிருந்து இங்கு வந்து திண்டு தலையணை போட்டுக்கொண்டு தூங்கும் மார்வாரி நம் நாட்டை விட்டு வெளிக்கிளம்புவான். திரா

8-ம் பக்கம் பார்க்க

வெற்றி காண்போமே

(சென்னை. பெ. ஜெகநாதன்)

முச்சங்கம் வளர்த்ததொரு பண்டை மொழியாம்
    மூதாதை போற்றிட்ட நல்ல மொழியாம்
அச்சமில்லாத் தமிழர்கள் பேசும் மொழியாம்
    ஆவினங்கள் அம்மாவென் றலறும் மொழியாம்
இச்சையுடன் பாலர்களும் பயிலும் மொழியாம்
    இனிமைமிகுக் கன்னல்சேர் தமிழ ருக்கு
துச்சமென யாம்கருதும் இந்தி மொழியைத்
    தூரத்தே இருந்திங்கே ஏனோ போட்டார்?

தலைவலியும் மார்வலியும் மிகுவ தல்லால்
    சத்தற்ற இந்தியினால் இலாப முண்டோ?
விலைகொடுத்து வயிறுவலி பெறுவ தன்றி
    விரைந்ததனைப் பயிலுவதால் பயனும் யாதோ?
குலைநோவும் அதிகரித்தே உடலுங் குன்றி
    கோரநிலை மாணவர்கள் எய்து கின்ற
நிலைகண்டும் யாங்களினி பொறுக்க மாட்டோம்
    நிச்சயமாய் மொழிப்போரில் வெற்றி காண்போம்

ஈரோட்டு ஒப்பற்ற லிங்கன்

[சென்றவாரத் தொடர்ச்சி]

நம் நாட்டில் ஆரியனின் வருகைக்கு முன்னல் நாகரீகத்திலே தலை சிறந்தவர்களாயும், பிற நாடுகளுக்குச் சென்று தம் வாணிபத்தை நடத்திப் பணம் படைத்தவர்களேயும், ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்னும் உயரிய கொள்கையினை உடையவர்களாகவும் இருந்தவர்கள் திராவிடர்கள் என்று சரித்திரம் கூறுகிறது. வரலாற்றுச் சான்றுகள் சுவடிகளில் காணக்கிடக்கின்றன- இன்றைக்கும் பார்க்கும் அளவிற்கு மொகஞ்சதாரோ, ஹாரப்பா, என்னும் இரு புதைந்த நகரங்களை தோண்டிப் பார்த்ததில் பல அழகிய கட்டடங்களும் விசாலமான தெருக்களும், உலோகங்களால் செய்யப்பட்ட பல ஆயுதங்களும், சித்திர வடிவமுள்ள எழுத்துக்களும், முத்திரைகளும் அங்கு காணப்படுகின்றன. இவ்வளவு உயரிய பண்புகளேயும், நாகரீகத்தையும் கொண்ட மக்கள் ஆரியரின் சூழ்ச்சியின் திறனல் என்றும் அடிமைகளாய் வாழும் அளவுக்கு ஆக்கப்பட்டார்கள்.

ஆடு மாடுகளை மேய்ப்பதற்காக வளமிகுந்த இத்திராவிட நாட்டிலே ஒண்டவந்த அந்த ஆரியர்கள் தம்மை உயர்ந்தவரென்றும் நம்மக்களை தாழ்ந்தவர்கள், சூத்திரர்கள், பஞ்சமர்கள், என்றும், நீங்கள் எங்களுக்குத் தொண்டு செய்யவே ஆண்டவனல் படைக்கப்பட்டவர்கள் என்றும் அதை நம் மக்கள் நம்பவேண்டி புராணங்களையும், இதிகாசங்களையும், சாஸ்திரங்களையும் எழுதி அவைகள் எல்லாம் கடவுளால் செய்யப்பட்டவை என்றும் கூறி நம் மக்களை மாக்களாக்கி பயமுறுத்தி ஏற்றுக்கொள்ளும்படிச்செய்து அதன் அடிப்படையில் சமுதாயத்தை தமக்குச் சுரண்டுவதற்கு ஏற்றவாறு அமைத்துக்கொண்டனர். அதனல் நம் மக்கள் ஆரியர்களுக்கு அடிமையாக வாழும் நிலைக்கு ஆக்கிவிட்டது. அதனல் நமது மக்கள் எதற்கெடுத்தாலும் "தலைவிதி" "முன்செய்த கரும பலன்" என்ற சொல்லைக் கூறி பகுத்தறிவுகொண்டு எதையும் சிந்திக்க முடியாத நிலைமைக்கு ஆக்கிவிட்டனர். இவ்வித அறியாமையை நம்மக்களிட மிருந்து போக்கவும், எதையும் பகுத்தறிவு கொண்டு சிந்திக்கவும், ஒவ்வொருவரும் தன் மானத்தோடு வாழவும், ஆரியரின் ஆணவச்செயலை ஒழிக்கவும் நாட்டின் விடுதலைக்காகவும் ஓயாதுழைக்கும் ஓர் ஒப்பற்ற லிங்கன் பெரியார் இராமசாமியைப் பெற்றுள்ளோம்.

கடவுளையும், மதத்தையும் காட்டி ஏகபோகக் கொள்ளை நடத்திய நாசக்கும்பலை சுயமரியாதை வெடிகுண்டுகளால் தகர்த்தெறிந்தார். கலை, சடங்கு, சாத்திரத்தின் பெயரால் அதிகாரம் செலுத்திய சுயநலக்கும்பலை பகுத்தறிவு கணைகள் தொடுத்து தாக்கினர். அரசியலில் ஆட்சியின் பெயரால் கொள்ளையடித்த வெள்ளையர் ஆதிக்கத்திற்கு சாவு மணி அடித்தார். மகத்தான உண்மையை நிலைநிறுத்தி வெற்றியே கண்டார். பெரியார் அவர்கள் கல்லடி, சொல்லடி, சிறைவாசம், கொடுமை, கொலை எல்லாவற்றையும் தைரியமாக ஏற்று ஒன்றையும் பொருட்படுத்தாமல் தான் மேற்கொண்ட இலட்சியத்தை வெற்றி காணும் முகத்தான் இடைவிடா முயற்சி செய்து வருகிறார். அவருக்கு உறுதுணையாக என் போன்ற வாலிபர்களும், திராவிடப் பெரியோர்களும், பெண்களும், பெரியார் அவர்களின் அடிச்சுவடை பின்பற்றி எல்லோரும் ஒரு மனப்பான்மையுடன் ஒத்துழைத்தால் மிக விரைவில் நம் இன்பத்திராவிடத் திருநாட்டை அடைவோம் என்பது உறுதி! உறுதி!! உறுதி!!!

வாழ்க திராவிடம்!

வெல்க தமிழ்! வாழ்க பெரியார்!

டெலிபோன்: 85 2

நியூடன் அண்டு கம்பெனி,

80, வாலாஜா ரோடு, மௌன்ட் ரோடு,

சென்னை 2,

கண்ணுக்கினிய எங்கிரேவிங்குகளும், சகல வித ஆப்டோன் பிளாக்குகளும், லைன் பிளாக்குகளும் ட்ரைகலர் பிளாக்குகளும், ரப்பர் ஸ்டாம்புகளும் செய்வதற்கான சிறந்த இடம். நம்பிக்கையும், புகழும் வாய்ந்த தக்க இடம்.

வெளியூர் ஆர்டர்களுக்கு பிரத்தியேக கவனிப்பு.

ஆசிரியருக்குக் கடிதங்கள்

"ஆசிரியர்" அவர்களுக்கு

தங்களது 26-2-49 தேதிய பீரங்கியில் கோபாலபுரம் ஸ்டோர்ஸைப் பற்றி தீட்டியிருந்த தலையங்கத்தின் செய்தி பூராவும் உண்மையே, அதில் எவராவது ஒருவர், தட்டிக் கேட்கும் படியான நிலைமை என்ற விஷயத்தின் ஆதரவில் நானும் ஒருவனே. அதனல் எனக்கு பலகஷ்டம் உண்டு. என்றாலும் யான் என்செய்வது! என்று வருத்தமுற்றிருந்தகாலை தாங்கள் தீட்டிய தலையங்கத்தின் செய்தியை கண்டதும் என் கஷ்டம் எவ்விதம் மாறின என்பதுதான் எனக்கே விளங்கவில்லை. இருந்தபோதிலும் இதை தாங்கள் விடா முயற்சியுடன் சிரத்தை எடுத்து தக்க நடவடிக்கைக்கு கொண்டுவந்து எங்கள் குறைகளை தீர்ப்பீர்கள் என்ற உறுதியை ஒவ்வொரு நாளும் எதிர்பார்க்கிறேம்.

வணக்கம் V. சாம்பமூர்த்தி.

ஆசிரியர் அவர்களுக்கு

மேல்நாடுகளில் உபயோகப்படும் பீரங்கிகள், மனிதவர்க்கத்தை அழிக்கும் ஒரு ராக்ஷஸத் தன்மை பெற்று விளங்குகின்றன. ஆனல் மற்றொரு பீரங்கி, மனிதவர்க்கத்தை அழிக்கவில்லை; மனித கோட்பாட்டுக்கு இழுக்கு செய்யும் கயவர்களின் திட்டத்தனத்தை அழிக்கிறது. முன்னதற்கும் பின்னதற்கும் எவ்வளவோ வித்தியாசம்! அந்த வித்தியாசத்தைக் கொண்டே, சமூகத்தின் முரண்பட்ட கொள்கைகளைப் பிடுங்கி எறிய வந்த "உடுமலைபீரங்கி" பாராட்டப்பட வேண்டிய பத்திரிகை அதிலே முன்னைய வாரத்துத் தலையங்கத்திலே கோபாலபுரம் கோவாபரேடிவ் ஸ்டோர்லைப் பற்றித் தீட்டியிருந்த விஷயங்கள் மனதைக் கலக்குகின்றன. கட்டுப்பாட்டையும், உண்மையையும் தகர்த்தெறிய நினைக்கும் மலைவிழுங்கிகளைப் பற்றிய செய்திகளை ஆணித்தரமாக எழுதியதுபற்றி, உங்கள் சேவை பெரிதளவு மதிக்கப்படுகிறது. உங்களுடைய சேவையை, மந்திரிமார்கள் சிறந்த முறையிலே பயன்படுத்திக்கொண்டு. ஊழலை ஒழித்து, கட்டுப்பாட்டையும், உண்மையான உரிமையையும் நிலைநாட்டுவார்கள் என எதிர்பார்க்கிறேன்.

வணக்கம் சீ. முத்துலட்சுமி

ஆசிரியர் அவர்களுக்கு

26-2-49ந் தேதி "பீரங்கி"யில் தாங்கிவந்த தலையங்கம் படிக்க உண்மையிலேயே ஆத்திரம்தான் வருகிறது கோபாலபுரம் கோவாபரேடிவ் ஸ்டோர்ஸ் இவ்வளவுதூரம் ஊழல் மலிந்திருக்குமென்று நினைக்கவே முடியவில்லை. இதற்குப்பெயரா கோவாபரேடிவ் ஸ்டோர்ஸ்? அதன் நிர்வாகிகள் எப்பக்காரர்களாக இருந்தால், அதில் பங்கு எடுத்துக்கொண்டிருப்பவர்களின் கதி என்னவாகிறது நீங்கள் இன்னும் ஊக்கம் எடுத்துக்கொண்டு, ஊழலை பகிரங்கமாக எழுதவேண்டியது உங்கள் கடமை நீங்கள் எழுதுவதின் மூலம் கோவாபரேடிவ் ஸ்டோர்ஸ் திருந்த வேண்டும். இல்லையேல் ஒழியவேண்டும். முதலைகளைக் கொல்வதனல் எத்தனையோ உயிர்கள் காப்பாற்றப்படுகிறது. அது மாதிரியே சமூகத்தின் உயிரைக் குடிக்கும் முதலையை அழித்துத்தான் ஆகவேண்டும்.

வணக்கம் K: சுவாமிநாதன்.

ஆசிரியர் அவர்களுக்கு

தங்களது 26-2-49-ம் தேதிய பீரங்கியில் கோபாலபுரம் கோவாப்ரேடிவ் ஸ்டோர்லைப்பற்றி எழுதியிருந்த செய்தியைப் பார்க்க மிகவும் சந்தோஷம். உங்களது துணிவு மிகவும் போற்றத்தக்கது. பத்திரிகை உலகில் உங்களைப்போன்ற தோழர்கள்தான் மக்களுக்கு வழிகாட்டியாக இருக்க முடியும், அதை நீங்கள் டை தலையங்கத்தின் மூலம் நிரூபித்து, சர்க்காருக்கும், பொதுமக்களுக்கும், வழிகாட்டி-பத்திரிகைதான் என்பதை காட்டி இருக்கிறீர்கள் உங்களுடைய துணிவு பொதுஜன சர்க்காருக்கும், லஞ்ச ஒழிப்பு வீரர்களுக்கும் எவ்வளவுதூரம் கண்விழிப்பு செய்யுமென்பதை பொறுத்து பார்ப்போம்?

வணக்கம் எஸ். வெங்கட்டராமன்.

ஆசிரியர் அவர்களுக்கு

தங்களது 26-2-49 தேதிய, பீரங்கியில் கோபாலபுரம் கோவாப்பரேட்டிவ் ஸ்டோரைப்பற்றி தாங்கள் எழுதிய தலையங்கத்தின் மூலம் தாங்கள் வெளியிட்ட மோசடிச் செய்தியைக்காண மிக்க சந்தோஷம்.

பொதுஜனங்களுக்கும் சர்க்காருக்கும் சிரத்தையுடன் வேலை செய்து வருவது மிகவும் போற்றத்தக்கது.

உலகில் உங்களைப்போன்ற தோழர்கள்தான் மக்களுக்கு துணைபுரிய முடியும். அதை தாங்கள் மேற்படி தலையங்கத்தின் மூலம் நிரூபித்து விட்டீர்கள் இது பொதுஜன சர்க்காருக்கு எவ்வளவுதூரம் கண்விழிப்பை ஏற்படுத்துகிறது என்பதை பொருத்திருந்து பார்ப்போம்.

வணக்கம் R. ஷெட்டி.

"ஆசிரியர் அவர்களுக்கு,

யானுகிய தேவவரம் என்பவர் எழுதும்சேதியாவது என்னவெனில் தங்களது 26-2-49 தேதியில்பிரசுரிக்கப்பட்ட பீரங்கியில், கோபாலபுரம் கோவாப்ரேட்டிவ் ஸ்டோரில்நடந்த அனியாயங்களைப் பற்றி வந்தசேதியை காண, மிக்க சந்தோஷப்பட்டேன் அதன் மூல்யமாக, நீங்கள்என்மாதிரி அன்பர்களுக்கும் சர்க்காருக்கும் வழிகாட்டியுள்ளீர்கள் கள்ள சந்தை காலிகளுக்கு நெருப்பிட்டு அவர்களை ஒழிக்க அடிகோலியிருக்கிறீர்கள்- உங்களுடைய துணிவு போற்றத்தக்கது நெஞ்சுறுதியும், நேர்மை திறனும், இன்றி முதலாளி தத்துவத்தை நோக்கி போய்க்கொண்டிருக்கும் பத்திரிகை உலகில் உங்களைப்போன்ற தோழர்கள்தான் மக்களுக்கு வழிகாட்டியாக இருக்கமுடியும்.

வணக்கம் S தேவவரம்.

பூட்டுத்தாக்கு திராவிடர் கழகம் (வட ஆற்காடு மாவட்டம்)

1-3-49-ல் திரு மருத்துவ வஞர்மணி அவர்களால் அமைக்கப்பட்டுள்ளது, தலைவர், உபதலைவர். செயலாளர். அங்கத்தினர்கள் தேர்தலும் முறையே நடைபெற்றுள்ளது என்று கழகத்தலைவர் சுதன் அறிவிக்கிறார்.

எல்லவரும் இன்புற்றிருக்க வேண்டும்

உடுமலை பீரங்கி

ஆசிரியர் உடுமலை B. இரங்கநாதன்

வாரப்பதிப்பு.

சென்னை	சனி	12-3-49

அறநிலை பாதுகாப்பு சீர்திருத்த மசோதா

ஆடக்கூடிய சூதாட்டங்களில் மிகவும் மோசமானதென்றே சொல்லலாம் அரசியல் சூதாட்டத்தை, சாமான்யரால் அல்ல, ஆனால் அறிவாளிகளால், சமய சந்தர்ப்பத்தை அறிந்து நடந்து கொள்பவர்களால் ஆடும்படியான முதல்தர சூதாட்டமெனவே பலமுறையும் சொல்லி வந்துள்ளோம். இவ்வாட்டத்தில் தேற்சியும் பேரும் புகழும் பெற்றவர் ஆங்கிலேயர்களே என்பது பலபேர் ஒத்துக்கொண்ட சேதியாகும். இவ்வாங்கிலேயர்களையும் தோற்கடிக்கக் கூடிய வல்லமை கொண்டிருந்தவர் தோழர் காந்தியாரே யாவர் என்பது மறுக்க முடியாத உண்மை.

தோழர் காந்தியார் அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகளும் பின்பற்றிய கொள்கைகளும் பலப்பல. பலவற்றில் பரிதாபகரமாகத் தோல்வியடைந்தார் என்று சொன்னால் காங்கிரஸ் நண்பர்கள் கடுஞ்சினம் கொள்வர் என்பதை நாமறிவோம். ஆயினும் தோல்வியிலேயே வெற்றி அடங்கி நிற்கிறது என்றதை அறிந்த அரசியல்வாதி காந்தியாரே யாவர்.

தனக்குத் தோல்வி ஏற்பட்ட காலத்திலெல்லாம், மிக நளினமாக "மக்கள் இன்னும் அவ்வளவுக்குப் பக்குவமாகவில்லை. நான் என்ன செய்யட்டும்" என்றே கூசாமல் வெளிக்குச் சொல்லி, தான் அடைந்த தோல்வியை வெளிக்குக் காட்டாமல், பழியை மக்களின் பேரிலேயே சுமத்தி, நிலைமையை மிக நாசூக்காக சமாளித்துக்கொண்டு வந்ததையும், உடனடியே வழிவகையைத் தானே மாற்றிக்கொண்டு அவ்வப்போது புது முயற்சியுடன், புது முறையுடன் வெளி வந்ததையும் நேயர்கள் கவனித்திருப்பார்களென்றே நினைக்கிறோம். இதை மிகவும் கவனிக்கும்படியும் கேட்டுக்கொள்ளுகிறோம். ஆட்சியாளர் மிகமிக கவனிக்கவேண்டும். இது அரசியல் துறையில்.

இன்னொரு விஷயத்தையும் கவனிக்க வேண்டுகிறோம். சமூகத் துறையை எடுத்துக் கொள்வோம். ஆருடமும் ஜோதிடமும் வள்ளுவனிடத்தில், மருத்துவமும் மருந்தும் நாவிதனிடத்தில், சங்கீதக் கலையும் நாட்டியமும், கட்டுவனிடத்தில், இன்னும் இதைப்போன்றவை பல பல மக்களிடமே யிருந்தன. அம்மக்கள் யாவரும் கீழ்தர மக்கள், தீண்டப்படாத மக்கள் என்றே கருதப்பட்டுவந்தனர். தீண்டப்படாதவர் செய்யும் தொழிலென்றே கருதப்பட்டு உயர்குலத்தோர் என்று நினைத்துக் கொண்டிருந்த பிற திராவிட மக்கள் இத்தகைய வேலைகளை மேற்கொள்ளாமல்விலக்கியிருந்தனர். இது எவ்வித முடிவைத்தந்தது? அவ்வந்த தொழிலும் கலையும் எவ்வித வளர்ச்சியும் இல்லாமல் நாளுக்கு நாள் கீழே போய்க் கொண்டிருக்க அதை நம்பியிருந்த திராவிடமக்களின் நிலையும் கீழ் நோக்கலாயிற்று. ஆகவே இந்நிலையால் திராவிடருக்குள்ளாகவே தாழ்ந்தவன் உயர்ந்தவன், மேல் குலத்தான் கீழ் குலத்தான் என்னும் வேற்றுமைகளும் பாகுபாடுகளும் வளர இடங்கொடுத்து விடவே, கிடைத்த அவ்விடத்தில் அமர்த்தினர் "குரு" என்ற பீடத்தை. அமர்ந்தனர் ஆரியர் அவ்வாசனத்தில். தீட்டினர் சட்ட திட்டங்களெல்லாம் தத்தம் இஷ்டத்துக்கும் சௌகரியத்துக்கும். ஆட்டி வைத்தனர் அப்போதிருந்த மன்னாதி மன்னர்களையெல்லாம் இப்போது தர்ப்பைப் புல்லென்றே லேசாகப் பேசப்பட்டு வரும் சாதாரண புல் அது காலத்திலே நாட்டையும் நாட்டினரையும் நாட்டை ஆள்வோரையும் ஆட்டிவைத்துவரும் கோலாகத்திகழ்ந்தது. மார்பிலே துவழும் சாதாரண பஞ்சு நூல் அச்சமயத்தில் அவ்விதம் ஆட்டிவைக்கும் மக்களுக்கு இருந்த தனிப்பட்ட சுதந்திரத்தை எடுத்துக் காட்டும் சின்னமாக விளங்கிற்று.

ஆயினும் இவ்வுபாயம் எப்படி நீடிக்கும்? காலம் மாறிற்று. மக்கள் அறிவு பெற்றனர். ஒவ்வொன்றையும் சிந்திக்கலாயினர் பகுத்தறிவு பெற்றனர். பலதையும் கணிக்க ஆரம்பித்தனர். வட்ட வடிவமும் வெள்ளை நிறமும் கொண்டிருந்தாலே "ரூபாய்" என்று நினைத்து வந்த காலம் மலையேறிற்று. உண்மையான "ரூபாய்" தானா என்று சுண்டிப்பார்க்க ஆரம்பித்து விட்டார் மக்கள்.

"கடவுள்" என்ற பெயரைச் சொல்லி காட்டுமிராண்டிகளாயிருந்த மக்களைக் கட்டுப்படுத்தியாக வேண்டிய அவசியம் இருந்திருக்கலாம். அதற்கான கோயில்களும் குருக்கள்களும் வேண்டியிருந்திருக்கலாம். பல கட்டுக் கதைகளும் அவசியமாக இருந்திருக்கலாம். இதைக்கண்டு நாம் ஏளனம் செய்தல் நன்றன்று. ஆனால் இப்பொழுதோ "கடவுள்" என்ற பேரும் "அவன் செயல்" என்ற அர்த்தமில்லா சொற்களும் பிற மக்களை, மக்களுக்குள்ளாகவே மக்களை, ஏழை மக்களை எதார்த்த மக்களை ஏமாற்றி வருவதற்கே பயன்பட்டு வருவதற்கான அளவுக்கு உபயோகமாக்கப் பட்டும் கையாளப்பட்டுமே வருவதால், இப்போதைய நிலையில் "கடவுள்" என்ற சொல்லையும் விளக்கத்தையும் வரட்டுவாதத்தையும் விடுத்து அறிவை அதுவும் பகுத்தறிவை, ஒவ்வொரு மனிதனுக்கும் இயற்கையாகவே அமைந்துள்ள பொற்கலமான நல்லறிவை தட்டி எழுப்பவேண்டிய காலமென்பதை மக்களில் பார்ப்பனர்கள் உள்பட பலரும் அறியவாரம்பித்து விட்டனர் என்பது ஒரு அளவுக்கு மகிழ்ச்சி தரக்கூடியதேயாகும். கோயில்களில் குழுமி நின்ற கூட்டங்களெங்கே? சப்பரத்துக்குப் பின் தொடர்ந்த சனாதனக் கூட்டங்கள் என்னாயிற்று? மக்கள் கொண்டிருந்த பயபக்தி என்னாயிற்று? கோயில்களிலும் திருவிழாக்காலங்களிலும் நடந்துவந்த ஆரப்பாட்டங்கள் என்னவாயிற்று? குருக்கள்களுக்கு வளைந்து கொடுத்த தன்மை என்னாயிற்று. "கடவுளுக்கு அர்ப்பணம்" என ஆடிப் பிழைத்த நங்கையர்கள் (தேவதாசிகள்) ஏன் தடுக்கப்பட்டார்கள்? நெற்றியில் இட்ட பட்டை நாமங்களும் தீட்டிய திருநீறுப் பட்டைகளும் என்னிலையில் (இனியும் இட்டுக் கொள்பவர்களால்) இட்டுக் கொள்ளப்படுகின்றன? இவைகளையெல்லாம் கவனிக்கு மிடத்து "கடவுள்" என்ற அச்சம் மாறி அறிவு என்ற விளக்கு எரிய ஆரம்பித்துவிட்டதாகத்தானே சொல்ல வேண்டும்.

இது மட்டிலுமா? கோயில் சொத்துக்கள் பல விதத்திலும் துர்வினியோகப் படுத்தப்பட்டு வருவகின்றும், கோயில் சொத்துக்கள் அடிக்கடி அவ்வங்கே திருடப்பட்டும், கொள்ளையடிக்கப்பட்டும் வருவதின்றும் "கோயிலில் ஒன்று மில்லை. அதற்குள் நட்டிருக்கும் கல்லில் சத்துமில்லை. அண்டியிருக்கும் குருக்களுக்கு மதியுமில்லை. நாடிவரும் மக்களுக்கோ நல்லறிவும் ஏற்படவில்லை" என்றுதானே முடிவு கொள்ள வேண்டும். காலத்திற்கேற்ற முறையில் நடந்து கொள்ள வேண்டியது மக்களின், நாட்டு மக்களின், அறிவுள்ள மக்களின். தலைவர்களின், அரசியலார்களின் ஆட்சியாளர்களின் நீங்காக் கடமையன்றோ?

காலம் அடைந்துவரும் மாறுதலையும் மக்கள் கொண்டுவரும் விழுச்சியையும், அறிவின் எழுச்சியையும் திராவிட மக்கள் அறிந்து கொள்ளத் தவிர்ந்து நீண்ட நித்திரையில் ஆழ்ந்திருந்தாலும் இதை உடனுக்குடனே அவ்வப்போது, நல்ல வண்ணம் முன்கூட்டியே எதிரே நோக்கி வரும் ஆபத்தையும் அவசியத்தையும்உணர்ந்து, தம்மை காலந் தாழ்த்தாது பக்குவப்படுத்திக் கொண்டு, சரிப்படுத்திக் கொண்டு வந்தவர்கள் பார்ப்பனர்கள்தான் என்பதை அறியாதார் அறிவிருந்தும் அறிவில்லாதவரேயாவர் என்பதை அச்சமில்லாமல், மிகத் துணிச்சலாகவே சொல்லலாம்.

அப்படிப்பட்ட அறிவும், ஆற்றலும் படைத்திருந்த பார்ப்பன சகோதரர்களுக்கும் தம்மை சரிப்படுத்திக் கொள்ள காலமும் தாமதமும் தேவைப்பட்டதுஎன்பதை எடுத்துச் சொல்லாமல் இருக்க முடியவில்லை. அக்காலத்தைத் தேடிக்கொள்ளும் வழியேயாகும் புதிதே வரும், கொண்டு வரப்படும் ஒவ்வொரு சீர்திருத்த சட்டத்தையும், திட்டத்தையும் தம்மால் ஆனவரை உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு எதிர்த்தும், தடுத்தும் தாக்கியும், வருவது என்பதை சற்று ஊன்றிக் கவனித்தால் எவரும் ஒத்துக்கொள்வர் என்றே நினைக்கின்றோம்.

ஆயினும் பார்ப்பனர்களும் இதை ஆமோதித்தாலும் வெளிப்படையாக ஒத்துக்கொள்வார்கள் என்பதை மாத்திரம் கனவுகூட காணமுடியாது. முன்னுக்குத் திரும்பினால் முற்போக்குக் கிறுப்பு, பின்னுக்குத் திரும்பினால் சனாதன உச்சிக் குடுமை. ஆலிங்கனம் செய்வது அந்நிய நாட்டு நாகரீகம். ஆனால் வாயால் போற்றி வருவதோ தம் மூதாதையரின் பழக்கவழக்கங்கள். வீட்டுக்குள்ளும் சமூகத்துக்குள்ளும் நிறைவேறுவதோ முற்படுவதற்கான சட்ட திட்டங்களும், நடை முறைகளும், வாக்கு வாதங்களும். ஆனால் வெளியிலோ சனாதன தருமம், சாமி, சமயம் சாத்திரம், என்ற கூப்பாடும். அவைகளை நிலை நிறுத்த வித வித, புத்திக்கு எட்டாத, அறிஞர்கள் ஒத்துக் கொள்ளாத, சீர்திருத்த வாதிகள் கண்டிக்கத்தக்க செய்கைகளும். முயற்சிகளும். இவைகள் எதைக்காட்டுகின்றன? விஷமம் என்றே சொல்லலாம். சுயநலம் யடைத்தவர் என்றும் தாக்கலாம். இன்னும் ஏதேதோ வித விதமாகவும் ஏசலாம். பார்ப்பனர்களும் இவையால் தாக்குண்டவர்கள் போலும் தம்முடைய நலம் பாதிக்கப்படுவதாகவும் முதலைக் கண்ணீர் வடித்து பாசாங்கு செய்யலாம். பிறமக்களை ஏமாற்றவும் பயன்படுத்திக்கொள்ளவும் பயன்படுத்திவரலாம், வருகிறார்கள் என்பதுதான் உண்மை. இச் சூழ்நிலையில் சிக்கி, மயங்கி, தயங்கி, தடுமாறி நிற்பவர்களே யாவர் சனாதனத்தை ஆதரித்து வரும் திராவிட மக்கள். திராவிடர்கள் இது வரையும் நசித்து வந்ததற்கும் நசித்து வருவதற்கும் முக்கிய காரணம் தம் எதார்த்த குணமும் செய்கையுமே யாகும். இவ்வெதார்த்த குணம் பிறரை முன்னுக்குக் கொண்டுவரவும் திராவிடரை படுகுழியில்ஆழ்த்தவும் தமக்கு தாமே சவக்குழி பறித்துக்கொள்ளவும் உதவிற்றே யொழிய மற்றெந்த வித நலனையும் அளித்துவிடவில்லை.

கொண்ட கணவன் இறந்துவிட அவனது உடலுடன் உயிருள்ள மனைவியை இறுகக்கட்டி, கட்டை யேற்றி, கட்டையால் அடித்து மடக்கி, சுட்டெ

5-ம் பக்கம் பார்க்க

சென்னை கோபால்புரம் கோவாப்ரேடிவ் ஸ்டோர் ஊழல்கள்

—எம். குமாரசாமி

சென்னை, கோபால்புரம், லிட்டி, கோவாப் ரேடிவ் ஸ்டோரில் நீண்ட நாளாக நடந்துவரும், நிர்வாக ஊழல்களும், கள்ளமார்க்கெட்டுப் பொய் கணக்கு மோசடிகளும். அவ்வித குற்றங்களை, வெளிக்காட்ட விடாதபடி, சதிசெய்துவரும் அதிகாரிகளின் அட்டூழியங்களையும், மக்கள் சர்க்கார் கவனிக்காதா?

குறிப்பாக, அரிசி, கோதுமை, சர்க்கரை, எண்ணெவகை, பனங்கற்கண்டு, வெல்லம், பாதங்கொட்டை, கற்கண்டு, கடலை, காப்பிக் கொட்டை, பாக்கு, துவரம் பருப்பு, உப்பு, தீப்பெட்டி, பருப்பு தினுசு, முதலிய இன்னும் பலவகைகளிலும். பொதுஜனங்களுக்கு சரியான முறையில், விநியோகிக்கப்படாமல். வேண்டியவர், வேண்டாதவர், என்ற வித்தியாசம் பார்த்து, உணவுப் பொருள்களின், உணவு கண்ட்ரோல் விதிகளை மீறி, அதிக விலைக்கு விற்பனை செய்தும், உணவு கட்டுப்பாடு (ரேஷன்) இருக்கும்பொழுது, அவ்விதிகளை மீறி, சிலருக்கு கிடைக்கவேண்டிய ரேஷன் அளவை. மோசடி செய்து ஏமாற்றி குறைத்துக் கொடுத்தும் சிலருக்கு அதிகமாகவும், இரட்டிப்பாகவும் கொடுத்தும், சில ரேஷன் கார்டுகளுக்கு, விற்காத பொழுது விற்பனை செய்ததாக, சர்க்காரையே ஏமாற்றி, மோசடி செய்து எழுதியும், இன்னும் பல விதங்களினாலும், கள்ளமார்க்கெட்டுப் பொய்க் கணக்கு எழுதி மோசடி செய்தும், துணிவகைகளிலும் அவ்விதமே. கண்ட்ரோல் விலையைமீறி, அதிக விலைக்கு விற்பனை செய்து ஏமாற்றியதும், துணி கண்ட்ரோல். கட்டுப்பாடு விதிகளை மீறி. ரேஷன் கார்டில் உள்ள அளவைவிட அதிகமாக கொடுத்து, அதனால் சர்க்காரையே ஏமாற்றியதும், துணி கண்ட்ரோல் கட்டுப்பாடு (ரேஷன்) இருக்கும்பொழுது அதைமீறி, கெவர்மெண்டையே ஏமாற்றி மோசடி செய்து அவர்களுக்கு வேண்டிய சிலருக்கு ரேஷன் கார்டு இல்லாமலேயே, துணி விற்பனை செய்தும் சில பில்களில் ஏதோ கார்டு நெம்பர் உள்ளதுபோல், கற்பனை சிருஷ்டியால் ஏதோ ஒரு நெம்பரை எழுதி, மோசடி செய்து சில பில்களும், பில்புக்கில் சட்டப்படி வரிசை நெம்பர் உள்ளதை உபயோகப்படுத்தாமல், அதைமீறி இவர்கள் இஷ்டப்படி பித்தலாட்டம் செய்ய கருதியே, அம்மாதிரி ஏதோ நெம்பர் இல்லாத பில் புக்கை வைத்துக்கொண்டு அதில் அநேக மோசடி செய்த அதன் கணக்குவகைகளிலும் பல மோசடி செய்தும் இன்னும் பலவகைகளிலும் கள்ளமார்க்கெட்டுப் பொய்க் கணக்கு மோசடிகளும், சோப்பு, சீப்பு, குடை, முதலிய இன்னும் பலவகைகளிலும் கொள்முதல் வாங்கிய இன்வாய்ஸ் பில்களுடன் கூடிய சிலவு கணக்கு விற்பனை பில் புக் டேபுக், லட்ஜர், ஸ்டாக்புக், கூட்ஸ்லட்ஜர், ஸ்டாக் ரிஜிஸ்டர், முதலிய இன்னும் சகல கணக்குகளிலும், ஒன்றுக்கொன்று அநேக வித்தியாசமாக. பல பொய்க் கணக்கு எழுதி அவ்விதங்களை கையாடி மோசடி செய்தும், ஸ்டோர் சாமான்களை பில் போடாமலே பிறகு பொடுவதாக சொல்லி அவர்கள் இஷ்டப்படி எடுத்துக்கொண்டு இவ்விதமெல்லாம் ஏமாற்றி மோசடி செய்து பொய்க் கணக்கு எழுதி இருப்பதும், இஷ்யூ ஆனபில்களை திரும்ப கான்சல் என்று எழுதியும், சில ஒரிஜினல் பில் இல்லாமலே பில்புக்கில் உள்ள டூப்ளிகேட்டில் மட்டும் கான்சல் என்று எழுதியும் இஷ்யூ ஆனபிறகு பில்புக்கில் உள்ள அசல் கணக்கை திருத்தியும், பில்புக், ஸ்டாக்புக் முதலியவற்றில் உள்ள அசல் கணக்கை கிழித்துவிட்டு நம்பிக்கை துரோகம்செய்தும்வேறு பொய்க் கணக்கு எழுதி, மோசடி செய்து அவைகளை கையாடி இருப்பதும், கன்வேயன்ஸ் சிலவுகளில் அதிகம் பொய்க் கணக்கு எழுதி மோசடி செய்தும், புஸ்தகங்களில் வரிசை நெம்பராக இருக்கவேண்டிய கணக்குகள் அவ்விதமில்லாமல் ஏமாற்றுவதற்காகவே, ஒன்றுக்கொன்று வித்தியாசமாக, யாரும் எளிதில் புரிந்துகொள்ள கூடாத வகையில், பல மோசடி பொய்க் கணக்கு எழுதியும் ஸ்டோர் சிப்பந்திகளின் வேலை விஷயத்திலும் அவர்களுடைய சம்பள விஷயங்களிலும் நம்பிக்கை துரோகம் மோசடி செய்து, இம்மாதிரி இன்னும் பலவகைகளினாலும், நம்பிக்கை துரோகம் மோசடி போர்ஜரி கையாடல் கள்ளமார்க்கெட்டு, பொய்க் கணக்கு முதலான பல மோசடி செய்து அதனால், சேல்ஸ்மேன் உத்தியோகத்திற்கு, பங்கம், கஷ்டம், நஷ்டம், முதலான தொல்லைகள் விளைவித்து நீக்செய்யகருதி, சதிசெய்து அதனால் கோவாப்ரேடிவ் டிபார்ட்மெண்டையே ஏமாற்றி ஸ்டோரையும் பங்குதாரர்களையும் பலமோசடி செய்து அதனால் சர்க்காருக்கு கிடைக்க கூடிய, விற்பனைவரி, வருமானவரி, முதலானவைகளிலும் சர்க்காரை மோசடி செய்தும் இன்னும் பலவகைகளிலும் கள்ளமார்க்கெட்டுப் பொய்க் கணக்கு எழுதி பலவிதத்திலும் பொதுஜனங்களையும், சர்க்காரையும், ஏமாற்றி வரும், பல மோசகடிகளைப்பற்றி கடந்த சர்க்காருக்கும், இப்பொழுது நடந்துவரும் பொதுஜன சர்க்காருக்கும், அவ்வப்பொழுது தகுந்த காரணத்துடன் அறிவிக்கப்பட்டிருந்தும் இவைகள் விஷயமான சிரத்தை அதிகாரிகளின் கவனத்திற்கே, புலப்படாமலிருந்து வருவது மிக்க வருந்தத்தக்க விஷயமாக இருக்கின்றது.

இவ்வித மோசடிகளைப் பற்றி கோவாப்ரேடிவ் இன்ஸ்பெக்டர், தேசிகாசாரி என்பவர் 1947 ஜூலையில் விசாரணை செய்வதாக பாவனை செய்துவந்து சட்டப்படி விசாரணை செய்யாமலும், நடவடிக்கை எடுக்காமலும், சில விஷயங்களை தெரிந்துகொண்டு தாறுமாறாக பேசி அவர்களுக்கு உடந்தையாக இருந்துகொண்டு சதிசெய்து அவ்வித தப்பு கணக்குகளில் சில வற்றை திருத்தும்படி செய்து மோசடி செய்தது ஏன்? அவைகளைப்பற்றி உடனே சப்ரிஜிஸ்டாரிடம் நேரில் போய் சொல்லியும், டிப்டிரிஜிஸ்டரார், சந்திரசேகர நாயுடுவுக்கு லட்டர்மூலமாக அறிவிக்கப்பட்டிருந்தும் அவைகளைப் பற்றி நடவடிக்கைகளுக்கு கொண்டு வாராமல் சதி செய்து இருந்து வருவதற்குக் காரணம் என்ன. பின் பலமுறை எழுதியும் தக்க நடவடிக்கை எடுக்காத காரணம் என்ன?

(தொடரும்)

இது உண்மையா?

குட்டிசாத்தானே இனியும் தயவில்லையா?

ஆடுவெட்டி பொங்க வைக்கிறேன்
சற்றே கண்ணைத் திறந்துபார்.

இதே சென்னையில் ஓரிரு வாரங்களுக்குமுன் யாரோ ஒரு பேர்வழியும் மற்றும் சிலருமாகச் சேர்ந்து கள்ள கறன்சி நோட்டுகள் போடுவதாக ஊரெங்கும் கும்பல் கும்பலாக பேசிவந்தும், இந்த ஒரு வாரமாக கிணற்றில் போட்ட கல்லைப்போல் செய்திகளெல்லாம் அடங்கி புசு புசுத்து வருவதின் மர்மம் என்ன?

குறிப்பு:—இது விடயமாக குண்டாந்தடிக்கு வேலை கொடுக்க தகவல்கள் தேவை. குட்டிச்சாத்தானுக்கு மனமிரங்காவிட்டாலும், பொது மக்களின் மனவாவது இரங்காதா கயவர்களை அம்பலப்படுத்த!

" குண்டாந்தடி "

[4-ம் பக்கம் தொடர்ச்சி)

ரித்து வந்த அந்தகாலத்திலிருந்து அறநிலைப் பாதுகாப்பு சீர்திருத்த மசோதா கொண்டுவந்திருக்கும் இதுநாள் வரைக்கும் கொண்டுவந்த, புகுத்தப்பட்ட சீர்திருத்தம் ஒவ்வொன்றும் பார்ப்பனர்களால். சனாதனிகளால், மடிசஞ்சிகளால், உருத்திராட்சப் பூனைகளால், மடத்துப்பிள்ளையார்களால்எவ்வெந்தத் தாக்குதலுக்கும், கண்டனத்துக்கும் உள்ளாக்கப்பட்டு வந்ததென்பதை மக்கள் கண்டறிதல் நன்று, அதில்அடங்கியிருக்கும் சுயநல கருத்தையும், திட்டத்தையும் தெள்ளெனக் காணலாம். ஆனல் அவ்விதம் வெளிக்கு எதிர்த்து வந்தார்களே யொழிய தம்மை காலத்திற்கேற்ப சரிப்படுத்திக்கொண்டு தான் வந்திருக்கிறார்கள். ஏமாந்தவரும் பின்வாங்கியவரும், அடிமைத்தனத்தை வளர்த்திக்கொண்டவர்களும் இத்திராவிடர்களே யாவர் என்று இந்நிலையில், திராவிடர்கள் விழிப்புற்றிருக்கும் இது நாளில் சொன்னல் புண்ணில் கோல் செலுத்தின குற்றத்தைப் புரிந்தவராவோம் என்பதை உணர்ந்தும் நாங்கள் சொல்லிக்காட்டாமல் இருக்க முடியவில்லை.

உதாரணமாக ஏற்கெனவே சொல்லி வந்த தொழில்களையும் கலைகளையும் பிறர் கைப்பற்ற வண்ணம் தடுத்து வந்தார்களேயொழிய, அத்தொழில்களையும், கலைகளையும் பார்ப்பன சகோதரர்கள் நாளடைவில் கைப்பற்றி அதனல் நலனும் பெற்ற வந்தார்கள், வருகிறார்கள் என்றால், அதிசயங் கொள்ள அங்கொன்றுமில்லை. புரோகித தொழிலிலிருந்து பிரம்மயக்ஞ காலைத் தூக்கிச் சதுர் ஆடும் கலை வரைக்கும் எந்த இடத்தில் எந்த சேரியில் புகுந்துகொண்டு தாண்டவமாடுகின்றதென்பதை சற்றேனும் மக்கள் கண்டறிவார்களேயானல் அதிசயங் கொள்ளத்தக்க விஷயம் அதிலொன்றுமில்லை. ஆனல் திராவிடர்கள் விழிப்புக் கொள்ள வேண்டியதேயாகும்.

இவ்விதமாக காலகாலமாய் ஆடிவரும் சாமர்த்திய சதுரங்க ஆட்டத்தில் வைத்தாடும் ஒரு காயேயாகும் இப்போது நடந்துவரும் அறநிலைப் பாதுகாப்பு சீர்திருத்த மசோதாவிற்குக் கொண்டுவரும் முட்டுக்கட்டை ஒவ்வொன்றும். வைக்கும் ஒவ்வொரு காயும் கல்லும் திராவிடர்களின் முன்னேற்றத்தை அடக்கிவைக்கவும் அதுவே சமயத்தில் பார்ப்பனர்கள் முன்னேறி திராவிடர்களின் பேரில் சவாரி செய்யவுமே பயன்படுகின்றன என்பதை மக்கள் உணர வேண்டும்.

மேற் கொண்டு எழுதி வாசகர்களின் அரிய நேரத்தை வீணுக்காது இந்நிலையில் அறநிலை பாதுகாப்பு சீர்திருத்த மசோதாவை ஆதரிப்பதா, எதிர்ப்பதா என்பதை முடிவுகட்டும் பணியை மக்களுக்கே விட்டுவைக்கின்றோம்.

ஆகவே இவ்விஷயங்களைக் கொண்டு பார்ப்பனர்களை, பார்ப்பன சகோதரர்களை, பாப்பன சகோதரிகளை அசடுகள் என்று நினைப்பதா அல்லது சிறந்த அறிவாளிகளும் சமய சந்தர்ப்பவாதிகளென்றும் கொள்வதா என்பதையும் மக்களே தீர்மானிக்கட்டும்.

ஆட்சியாளர்களின் வரவு செலவு திட்டங்களைப் பற்றி எமது அபிப்பிராயத்தை எழுத அவாக்கொண்டு ஆரம்பித்தும் அறநிலை பாதுகாப்பு மசோதாவைப் பற்றி எழுதியாக வேண்டிய அவசியத்தை எம்மால் நீக்க இயலவில்லை. ஊன்றிக் கவனித்தால் ஆட்சியாளருக்குச் சட்டென விளங்காமல் போகாது.

குப்பனும் கோமான்களும்.

[கம்பம் சி. நடராசன்]

“என்ன மச்சான்! எசமானரு கூலி கொடுத்தாரா”?

“இல்ல குப்பி, போடா வாங்கிக்கிலாம்னு லேசா பேசனரு. நாம் பட்ற கஷ்டம் அவருக்கு என்னத்த தெரியபோவுது.”

“இருள் கப்பிகிட்டு வருது. விளக்கெரிக்க எண்ணேயில்லே. வெள்ளனா கூழ குடிச்சுட்டு கூலிய வாங்கி எண்ணெ வாங்கிட்டுவா மச்சான்.”

“கூழெடுத்துட்டுவா குப்பி? குடிச்சுபோட்டு கூலிய வாங்கியாரேன்.”

“இந்தா கொண்டு வாரேன்.”

‘ஐயையோ! மச்சான் தேள் கொட்டிபோடுச்சே! வலி பொறுக்க முடியலயே, ஐயையோ!’

என்று அலறினள் குப்பி. குப்பன் திடுக்கிட்டு குடிசைக்குள் நுழைந்தான். மனேவியின் வேதனே கண்டு மனம் தாளாமல்,

எசமானங்கிட்ட கூலிய, வாங்கி தேள் கடிக்கு மருந்து வாங்கிட்டு வெரசா வந்துட்றேன் குப்பி. என்று வெளியில் சென்றான்.

“எசமான் கும்பிட்றேனுங்க”

“ஏண்டா அவ்வளவு நேரம்”?

“எசமா எம்பொஞ்சாதிய தேள் கொட்டி போடுச்சு, மருந்து வாங்கணும். பணம் வேணும் எசமான்”

“என்னடாப் பசப்பற, கொடுத்துவச்சவன் மாதிரி கேட்கிறே! போடா போ அம்மா லக்ஷதீபம் பார்க்கபோகணும் வண்டிய ஓட்டிட்டுவாடா”?

“என்னங்க எசமான். எண்ண வாங்க காசில்லாம விளக்கு எரியல வெளிச்சமில்லாம எம்பொஞ்சாதிய தேள் கொட்டி போடுச்சு இரக்கங்காட்டுங்க எசமான் மருந்து வாங்கி கொடுத்துட்டதும் ஓடியாரேன்.”

“ஏண்டா! அம்மா லக்ஷதீபம் பார்க்கணும்னு அரை மணி நேரமா அலங்காரத்தெ முடிச்சு காத்துக்கிட்டிருக்காங்க. வண்டிய ஓட்டிட்டு வாடான்னு வம்பளந்திட்டா நிக்கிறே. உரிச்சு போடுவேன் தோலே. போடா சீக்கிரம் வண்டிய ஓட்டிட்டு வாடா.”

“அடியே, அரங்கம் டிபன் தயாராச்சா”?

“எல்லாம் தயாராச்சு, நீங்க சாப்பிட வேண்டியதுதான் பாக்கி”

“அர்ச்சனேக்கு வேண்டிய சாமானெல்லாம் எடுத்துவை. அய்யருக்கு ஒரு வேஷ்டியும், விசேஷ நாளா இருப்பதுனலே நிறைய செலவழிக்க வேண்டியிருக்கும் ஐம்பது ரூபாயும் எடுத்துவை.

“அடியே அலமு என்ன தாமதம் பண்ணிண்டிருக்கே. இன்னிக்கு மிராசுதார் முருகேச முதலியார் நேத்திக்கே சொல்லிண்டு போனர். நாள விசேஷமா உங்களே கவனிச்சுக்கலாம்னு. அவாளும் தினமும் கோவிலுக்கு வந்து ஒரு அர்ச்சனே யாவது பண்ணும போறதில்லே. இன்னும் அவருக்கு ஒரு குழந்தைக்குகூட பிராப்த மில்லே அவா சம்சாரம் அரங்கநாயகியிருக்காளான்னேலக்ஷ்மின்னு அவளுக்குத்தான் தகும். சிறு வயசு பொண்ணு. சொத்து நிறைய இருக்குன்னு ஐம்பது வயசு முருகேச முதலியாருக்கு இரண்டாந்தாரமா கொண்டு வந்து கொடுத்திருக்கா. இந்த லட்சணத்திலே அவர் வியாதிக்காரர் போலிருக்கு. என்ன சவாமி இன்னும் புத்ர பாக்யம் அனுக்கிரகம் பண்ணலன்னு தினமும் கேட்டிண்டிருக்கா. நான் கிரகதோஷம் இருக்குன்னு சொல்லி வச்சேன். அந்த விபூதியை எடு நேரமாயிடுத்து நான் போகணும்.”

“இந்தாங்கோ இன்னிக்கு வரும்போது நிறைய ரோஜா மாலே எடுத்திண்டு வாங்கோ அடுத்தாத்து அம்புஜம். உன் அதிர்ஷ்டம் அர்ச்சகர் ஆம்படையாளா வந்து வாச்சிண்டிருக்கா. எங்களெல்லாம் கவனிக்க மாட்டிண்ரியே” என்று அங்கலாய்க்கிறு!

“ஏண்டி நம்மளவாளுக்கு இல்லாம யாருக்கு கொடுத்திட போறேன் இன்னிக்கு நிறைய எடுத்துண்டுவர்ரேன்.”

“குப்பி எங்கன கடிச்சுச்சு? மருந்து தடவி விடுகிறேன்.”

“ஐயோ வலி பொறுக்க முடியலயே இந்தா மச்சான் இந்த விரல்ல. என்ன மச்சான் எசமான் கூலி கொடுத்தாரா?

அதையேன் கேக்கிற குப்பி, கேட்டதுக்கு அம்மா கோவிலுக்கு போகணுமாம். வண்டியை ஓட்டிட்டு வாடா. இல்லாட்டி முதுகுத்தோலே உரிச்சப்போடுவேன்னு விரட்டிட்டாரு. கடையிலே நாள தர்ரேன்னு கெஞ்சி மருந்த வாங்கிட்டு வந்தேன் என்ன செய்யறது குப்பி, நாம செஞ்ச தவம் இந்த பாடுபட்றோம்.

“என்னப்பா வண்டிய பூட்டியாச்சா”?

“இந்தா பூட்றேனம்மா சாப்பிடாம நேரே வர்ரம்மா ஏதாவது பழசுகிழசு இருந்தா போடுங்கம்மா.”

“சீக்கிரம் சாப்பிடு கணக்குபிள்ளேயிடம் ஐயா பேசிக்கிட்டிருக்காரு அதுக்குள்ள சாப்பிட்டுட்டு வண்டிய பூட்டு.” என்றாள் அரங்கநாயகி.

“என்னடா வண்டிய பூட்டியாச்சா”?

பூட்டியாச்சுங்க எசமான்.

அரங்கம்!

இந்தா வந்துட்டேன்.

“அர்ச்சகரே அந்த மிராசுதார் அருகில் வருகின்ற வடிவழகியார்? மலர்ந்த மலர் போல் காட்சியளிக்கிறளே.

“அது மலர்ந்து மூன்று வருஷம் ஆயிடுத்தே. மலருக்கு உரியவா, பக்கத்திலேயே வர்ராளே.”

உண்மையாகத்தானு? பார்க்க பரிதாபகரமாய் இருக்கிறதே. மகளேப்போல் இருக்கின்ற பருவ மங்கையை மனேவியாகக் கொண்ட இந்த மகானுபாவனே தாலி கட்டிய தகப்பனர்களின் சங்கத்தில் இவரையும்ஒரு மெம்பராகபதிவுசெய்துபுட வேண்டியதுதான். இவர்களே உங்களுக்கு தெரியுமா? தெரியுமாவா? இவாளப் போலவா தானே அம்மன் சேவடிக்கு நிறைய படி அளக்கிறு. பக்தர்களே, அதுவும் பண பூபதிகளே இந்த பட்டருக்கு பழக்கமில்லாட்டா பகவான் கைங்கரியம் நிறைவேறுமோ?

“அப்ப ஒரு மாதிரியா முடிச்சுப் போடலாம்னு சொல்லுங்கோ?

“சிவ! சிவா!! நாக்கு வெந்திட போறது லக்ஷ்மினு அவளுக்குத்தான் தகும் அப்படியெல்லாம் வித்தியாசமா நினேச்சுடாதேள்.”

“சரித்தான் சுவாமிகளே நான் வர்ரேன் இந்தாரும் இந்த நூறு ரூபாய் செலவிற்கு வைத்துக் கொள்ளுங்கோ.”

“சாயங்காலம் ஆத்துப்பக்கமா வந்துட்டு போங்கோ.”

“வரணும் வரணும் எல்லாரும் வழியவிட்டு நில்லுங்கோ உள்ள வாங்க அம்மன் அருகில் நின்று நன்னு தெரிசியுங்கோ.

“என்ண சுவாமி சிறிது நேரத்திற்குமுன் பேசிகிட்டு இருந்தாரே! அவர் யார்?”

“உங்களுக்கு தெரியாதான்னே அவர்தான் அஞ்சலூர் அருணசலம் செட்டியார் பிள்ள பெரிய மிராசுதார் திருவிழாவிற்கு வந்திருக்கார். நல்ல பக்திமான் சுவாமி காயரிம்னு தெரிஞ்சாபோதும் அங்க போயிடுவார்.”

“ஓகோ.........அரங்கம் அபிஷேக சாமானெல்லாம் இங்கே கொண்டுவா.”

“இந்தாங்க.”

“இந்தாங்க சுவாமி இன்று லக்ஷார்ச்சனே செய்திடுங்க. அபிஷேகம் ஆராதனேயெல்லாம் அமோகமா இருக்கணும். அரங்கத்துக்கும் காரியம் கைகூடணும்.”

“இப்பத்தான் ஞாபகம் வந்திடுத்து இனி உங்களுக்கு அதிர்ஷ்டந்தான். பாருங்கோ நேத்திக்கு இரவு அம்மன் கனவில் தோன்றி அரங்க நாயகிக்கு குழந்தை பொறந்தா ஆயிர ரூபாய்க்கு அபிஷேக ஆராதனே நடத்தச் சொல்வாயா என்றது. நான் உடனே உங்க அனுமதியக்கூட எதிர்பார்க்காமல் ஆயிரமென்ன இரண்டாயிரம் செய்துட சொல்றேன்னு சொல்லிட்டேன். என்னமோ கனவு பலிச்சிண்டா அம்மனுக்கு அளிச்சிண்ட வாக்குபடி காரியத்தை முடிச்சுடணும்”?

“என்ன சுவாமி அரும்பு விடும் போதே ஆயிரம் செலவழிப்பேனே! அதற்கப்புரம் என்னே கேட்கவா வேண்டும்”?

“அர்ச்சனே நிறைய பண்ண வேண்டியிருக்கிறதுனலே சாயங்காலம் அர்ச்சனே பண்ணிண்டு பிரசாதத்தை என் ஆத்லவச்சின்டிருக்கேன். உங்க சம்சாரத்தை எங்க ஆத்துக்கு அனுப்பிவையுங்கோ இன்னிக்கு என் ஆத்துக்காரி விசேஷமா அம்மன் பிரார்த்தனே பண்ண போறளாம். கூட இருந்து தெரிசனம் பண்ணிண்டு பிரசாதத்தை கொடுத்தனுப்புகிறேன்.”

“அதற்கென்ன சுவாமி ஆட்சேபனே சாயங்காலம் வண்டியில் அனுப்பிவைக்கிறேன்,”

“அரங்கம்! இந்தா குங்குமம் விபூதி யெலால் ம்வாங்கி வை...... வரட்டுங்களா சுவாமி?

“நன்னுபோய்ட்டு வாங்க”

குப்பிசங்கதி கேட்டயா? ரொம்ப ரகஸ்யமா இருக்கனும் வெளியிலே தெரிஞ்சா நம்ம தல போயிடும்”

“என்ன மச்சான்’ என்ன சங்கதி?”

“எசமானியம்மா வண்டியிலே ஏத்திகிட்டு அர்ச்சகர் சாமி வீட்டுக்கு போனனு? அப்ப யாரோ மன் மதனுட்டமா அங்க ஒருத்தரு உட்கார்ந்திருந்தாரு. நம்ம எசமானியம்மா உள்ள போச்சு. அர்ச்சகர்சாமி வெளிலே வந்து அநத அய்யாகிட்ட குசுகுசுன்னு என்னமோ பேசி ஒரு. அர்ச்சகரு சாமி வெளிலே போயிட்டாரு. அந்த அய்யா உள்ளே போனரு. என்னத்த சொல்ல குப்பி அந்த கடவுளு தான் கேக்கனும் எசமானியம்மா ஐயையோ நாசமா போகன்னு சத்தம் கேட்டது. நான் போயி என்னுன்னு பார்க்கலாம்னு சாமி வீட்டுக்குள்ள எப்படி நுழையறது? மேலும் பெரிய இடத்து விவகாரம் நமக்கெதுக்குன்னு பேசாமஇருந்துட்டேன். அப்பறம் ஒன்றும் சத்தம் கேக்கல. ரொம்ப நேரம் கழிச்சு எசமானியம்மா வெளிய வந்தாங்க. முகமெல்லாம் வாடியிருந்தது. வண்டியிலே ஏறிக்கிட்டாங்க. அர்ச்சகருசாமி பொஞ்சாதி தட்டுலே என்னமோ கொணடுவந்து வண்டியிலே வச்சாங்க வண்டியிலே போய்கிட்டே எச்சமானியம்மா என்னபாத்து குப்பா ஐயா கிட்ட என்னத்தையும் உளரி கொட்டி போடாதே. இந்தா இரண்டு ரூபான்னு கொடுத்தாங்க நான் என்னத்துக்கமா சொல்ல போறேன்னு சொல்லிட்டு வந்துட்டேன்”

“ஏன் மச்சான் அந்தம்மா பாவம் அவ்வளவு தூரத்துக்கு போக மாட்டாங்களே?”

‘எல்லாம் அந்த அர்ச்சகரு’ வேலேதான் குப்பி.

“என்ன முதலியார்வாள் புத்திர சம்பத்து உண்டாயிடுத்தாமே?

“எல்லாம் கடவுள் கிருபையாலே என் மனக்குறை தீர்ந்தது” இந்தாங்க கல்கண்டு பழம் இலே பாக்கு எடுத்துக்குங்க.

“தீர்க்காயுசார் இருக்கணும் நான் வர்ரேன்”

“அடே குப்பா அர்ச்சகர் சாமி வீட்ல போயி அர்ச்சகருட்ட எசமானுக்கு குழந்தை பிறந்திருக்குன்னு சொல்லி கூட்டிட்டு வாடா போ”-

“ஆகட்டுஞ் சாமி. என்று குப்பன் சென்றான்.

ஓமந்தூராரும் பெரியாரும்

மழை பெய்யாததற்கு காரணம் நாட்டில் ஒழுக்கம் இல்லாமையே.

ஓமந்தூரார்

——: (x) :——

ஒழுக்கம் இல்லாமைக்கு காரணம் நாட்டில் மழை இல்லாமை யே

பெரியார்

கமலாவின் கோரிக்கை.

P. A. R. S செல்வராசன். வண்ணை.

என்னைப்போல் துர்பாக்கியம் வாய்ந்த பெண் இந்நாட்டிலேயே இல்லை என்று அறிவுறுத்த ஆவலாயுள்ளேன். நான் எனது வாழ்க்கையை கூறுவதற்காக அல்ல, என்னைப்போல் திராவிட சிறுமிகளாகிய கலாசாலை பெண்களுக்கு எச்சரிக்கை செய்யவே கூறும் சில சொற்கள்.

என் பெற்றோருக்கு செல்வ புதல்வியாக மிகவும் பெருமையுடன் வளர்க்கப்பட்டு, உபாத்தியாயினி பயிற்சிக்காக திருவல்லிக்கேணி மாணவிக் கல்லூரியில் விடப்பட்டேன் என் பெயர் கமலா. வாழ்ந்து கெட்டு வகையின்றி வறுமைப்பிணியில் வாழும் தாழ்ந்த வகுப்பை சார்ந்த குடும்பங்களில்- எங்கள் குடும்பமும் ஒன்று. வளமை கொஞ்சும் சோலையாக இருந்த வாழ்வு, வறுமை இருளடைந்து விட்டது. காரணம் என் தந்தையின் இறப்பு! உதவிக்கு ஆட்களில்லாத நானும் என் தாயும் காடு முரடான பாதையில் பயணம் செய்தோம், இன்னல் எங்களை பிடித்தாட்டாமலில்லை. நான் கற்றவள் தான். உள்ளத்தில் உரமும் உடலில் வலிவும்! முகத்தில் குன்று வசீகரமும் இருந்தன. இளமை துடிதுடிப்பு நினைவோடு நின்று விடுமே தவிர நிலைபெறும் நிகழ்ச்சியாக மாறாது. பெண்கள் பேதையென்றுதான் சாத்திரம் சாற்றுகின்றது. ஆனால் ஆண்கள் அப்படியில்லை. அவர்களைப்போல் நடக்க நம் சமூகம் இடந்தாராது. சில நாள் சென்றதும் சுற்றத்தினர் ஒன்று கூடி என்னை குடும்ப விளக்காக மாற்ற எத்தனித்தனர். அவர்கள் எண்ணம் வானத்தில் தோன்றும் வானவில்லாக அழகு பெற்றிருந்ததே தவிர அக்கரை கொண்டு முன் வந்து முடித்துவைக்க முன் வருவோர் எவருமில்லை!!

நான் பயிலும் கல்லூரி அதிக தொலைவானதால் மின்சார வண்டியில் வருவது வழக்கம் ஒரு நாள் நான் வண்டியை விட்டு இறங்கும் பொழுது, நான் கட்டியிருந்த சேலை காலில் சிக்கி, இடறி விழுந்திருப்பேன்; நல்லவேளையாக என் வயதளவு ஒத்த ஒரு வாலிபன் உதவியினால் உயிர் தப்பித்தது! இல்லையெனின் பல தொல்லைகளுக்கு ஆளாக நேரிடும். ஆபத்தில் உதவிய அந்த வாலிபனுக்கு நன்றி செலுத்தினேன். பரவாயில்லை யென்று பாசம் நிறைந்த குரலில் பதிலுரைத்தான்—அன்று முதல் எங்கள் இருவரிடையே காதல் அரும்பு முளைக்க தடங்கிற்று. கைம்மாறு செய்ததின் பயனாக அவனை காதல் கொள்ளவில்லை. உபகாரத்திற்கு நன்றி தான் செலுத்துவார்களே தவிர, ஆசை நாயகனாக இரு என்று எவரும் நவிலார். அவனுடைய இளமையாவ பருவம் என்னை மயக்கிற்று. காந்தத்தில் சிக்கிய இரும்பானேன் மது உண்ட தேனியாக நிலைமாறினேன். காதல் மணம் வீசி விரியதுடங்கிற்று. அப்பொழுது தான் எங்கள் கூட்டு சேர்க்கையின் சூழ்நிலை ஒன்று சேர்ந்தது. அணைத்தான்—முத்தமிட்டான்—கற்கண்டே என்று கனிவான மொழியில் பேசினான்—மணம் செய்து தம்பதிகளாக மாறுவோம் என உறுதிமொழி உரைத்தான் நெஞ்சில் நேர்மையற்று, வாயில் பொய்யை ஒட்டவைத்து பேசும் தந்திர சொல் என்று நானறியவில்லை. பேதை மயங்கினேன் முடிவில் என் கற்பை விலைக்கு வாங்கும் கயவனானான். ஒருநாள் இன்பப்புரி பயணம், வயிற்றில் ஒரு வைரக்கட்டி தோன்றி விட்டது. என் காதலில் புதிய ஜீவன் இருப்பதாக புலம்பியவன் புத்திக்கு புறம்பாக நடப்பானென்று நினைத்தேனில்லை. எத்தனையோ காதல் கடிதம் எழுதினான். நினைத்தாலே நெஞ்சு வெடித்து விடும் போன்ற நிலை! தேனீ, மலரில் ஊறும் தேனைக் குடித்து வேறு மலரில் தாவுவதைப் போல, பாதகன் என்னை நிரபராதியாக்கிவிட்டு வயிற்றில் சுமையும் கட்டி, சமுகத்தார் தூற்றுதலை பெரிதாக வாங்கி தந்து விட்டு—நீ ஊர்கோடியிலிருக்கும் கீழான ஜாதி, உன்னை மணந்தால் என் சமூகம் என்னை எள்ளி நகையாடும்; நாயே கிட்டே அண்டாதே எட்டி நில் என்று நெஞ்சில் ஈட்டியை பாய்ச்சும் சொற்களை அள்ளிவீசி அருமையாக அன்னியப் பெண்ணிடம் ஆனந்த வாழ்வு கழிக்கிறான்.

அவனையும் தான் ஆண்டன் அருள் புரிகிறான். உள்ளபடி ஆண்டவனுக்கு சக்தியிருந்தால் ஒன்று என் வாழ்க்கைக்குபரிகாரம் தேடித் தர வேண்டும். அல்லது அந்த பாதகனை—மதவெறியினால் மாந்தர்கள் கஷ்டப்படுவார்கள் என்று ஆயிரம் தடவை அடுக்கு மொழிகளில் கூறிய **அண்ணாவின்** கொள்கையை கைபிடித்து நடவாத கயவனை—கண்டித்தல் வேண்டும் அப்படி யல்லாமல் என்னை நடு ஆற்றில் தயங்க விட்டிருப்பது தான் கடவுளின் தன்மையா?

கடவுள் எங்கே இருக்கிறது! கற்பனை கர்த்தாக்கள் சிறு உளியின் முனையில் உற்பத்தி செய்வதுதான் கடவுளா? இல்லவே இல்லை. இன்றுதான் உணர்ந்தேன். அதோ தெரிகிறது, **பெரியாரின்** உருவம் பக்கத்திலே பகுத்தறிவு சுடரொளி **அண்ணா** இருக்கின்றார். புத்துலக கவிஞர் **பாரதிதாசன்** இடையில் நிற்கின்றார். இவர்கள் மூவர் முகமும் கவலை பொங்கி சோகம் தொய்ந்திருக்கின்றது. இம்மாதிரி நிகழ்ச்சிகளைக்கண்டு நினைவு தடுமாறு கின்றனர். இவர்கள் மூவர் சொற்களில் முத்துக்கள் சிந்து கின்றன.

நாட்டில் படிந்துள்ள. அறியாமை கறையை அறவே அகற்ற, பாடுபடும் அருந்திறன் வீரர்கள். அவர்கள் சொல்லிலே உண்மை தவழ்கின்றன. நான் யாரை வெறுத்தேனோ, அவர்கள் எனக்கு விவேகரத்தினங்கள் ஆகின்றனர். எந்த இயக்கம் நாட்டின் நாசகார தத்துவத்தை உணர்த்து கின்றது, என்று நம்பினேனோ, அது இப்போது அறிவுக்கு தேர்ந்தெடுத்த தங்கமாக காட்சியளிக்கின்றது. இவர்கள் மூவரும் கருத்து சிற்பிகள்—கண்ணை திறந்து விடும் கர்மவீரர்கள். நம் திராவிட சமுதாயத்திற்கு வழிகாட்டி. அவர்கள் வாயிலிருந்து வருவது, கற்கண்டு கருத்துக்கள். அதன் கனிவு யாருக்கு தெரியும். என்னைப்போல் பட்டால்தானே தெரியும்.

கல்லைக்கண்டு கருத்தழியும் மடையன் எனது வாழ்வில் நஞ்சு கலந்தான். மதம்பேசி திரியும் மடையர்கள்—என் மானத்தை பறித்த மந்தியை விட்டு விட்டு என்மீது குறை கூறும் நாசகாலர்களுக்கு— நாடே, நீயே தீர்ப்பு கூறு! சனாதனம் பேசும் சண்டாளர்களை, சம்மட்டியெனும் அறிவால், பொடி பொடியாக்க நினைக்காதே மந்த மதியுக நாடே,—நீயே தீர்ப்பு கூறு! கன்னிப்பெண்ணை கண்ணைக்காட்டி, காட்டில் கலங்க விட்டுச் சென்றதை, பரிதாபம் என்று கருதாத கருத்தற்ற நாடே நீயே தீர்ப்பு கூறு! சிறிது மேலான குலத்தினர்— தாழ்ந்த வகுப்பில் பிறந்தற்க்காக—சாரை உறிஞ்சி கிழே துப்பும் சக்கையாக்கிய என்னை கண்டாவது கன்னிப்பெண்களான நீங்களாவது யுக்தியோடு நடவுங்கள். இதுவே எனது கோரிக்கை. மேலும் நாட்டுக்கு புது வாழ்வு தேடித்தர, சளைக்காது உழைத்து மூலை முடுக்குகளெல்லாம் சென்று, குருட்டு நம்பிக்கை-மௌடீகம் —உயர்வு தாழ்வு பிணக்கு இவைகள் சுட்டு சாம்பலாக்க வேண்டுமென்று, பகுத்தறிவு பணி புரியும், **வெண்தாடி வேந்தன் பெரியார் வாழ்க**— அதற்கு துணையாக, கட்டுடைத்த காட்டாற்று வெள்ளம் போல் அறிவு வெள்ளம் பாய்ச்சிடும் **அறிஞர் அண்ணு வாழ்க**—தெள்ளு தமிழில் தெளிவு தரும் கருத்துக் கோவைகளை சேர்த்து, கவிதை மழை பொழியும் **புரட்சி கவி பாரதி தாசன் வாழ்க**— ஆம் இவர்கள் இன்னும் சில காலம் வாழ்ந்தால் தான், என்னைப்போல் தவிக்கும் பெண்மணிகளுக்கு ஆதரவும். காட்டில் பீடிக்கப் பட்டுள்ள அறியாமையும் அகலும்.

வாழ்க பெரியாரிசம் !!

பச்சையப்பன் கல்லூரியில்

திரு. வி. க.

திராவிட இயக்கத்தின் உயர்ந்த இலட்சியங்களை. உணராத சில பத்திரிகை ஆசிரியர்களும். அரசியல் வாதிகளும் ஒழுக்கம் விட்டு பிரச்சாரம் செய்கிறார்கள். அவைகளால் உங்கள் உள்ளத்தை குழப்பிக் கொள்ளா தீர்கள்.

திராவிட இயக்கமும். திருவள்ளுவர் இயக்கமும் ஒன்றே மேலும் திராவிட கழகம் ஒன்று தான் உலக மக்கள் அனைவரையும் சம நிலையில் காண விழையும் கழகம்.

2-3-49 தி. வி. க.

மதமெனுஞ் சேற்றிலே மனித வித்து

(க. பரமசிவன்)

விதையென விழுந்த மனிதவித்து,
வீசுங் காற்றிற் அடிபட்டு,
மதமெனுஞ் சேற்றில் விழுந்து பின்னே
மரமாய் வளர வேர்விட்டு,
நிதம் நிதம் பற்பல கிளைகள் விட்டு,
நீசப் பறவைகள் வாழவிட்டு!
விதம் விதம் எச்சல் விழவும்விட்டு!
வேடிக் கையாய் வளர்ந்ததடா!

பின்னே சிலநாள் சென்றபின்னே
பெரிய மரமெனக் கண்டேன் நான்,
மன்னிக் கிடந்த பலபாம்பின்
பெருத்த கூட்டம் வேரெனவே
மன்னிப் பெருத்த மலையடியே
மரத்தின் பெருத்த அடியாக
சின்னக் குகையெல்லாம் மரப் பொந்து
சீறும் பாம்புகள் வாழுமடம்,

வளர்ந்த மரத்தின் வான்கொம்பில்
வளமை மிக்க மடமைப்பூ
வளர்ந்துநின்றது அழித்துவிட
வம்பு வளரக் கலகக்காய்
வளமை கொண்டு வளர்ந்தது பின்னே
வம்பு வளர்ந்தது, நம்வாழ்க்கை
இளமை தன்னில் அழித்துவிடும்
இதனை யகற்றல் கடமையடா!

1-ம் பக்கம் தொடர்சி

"உழைத்து உருக்குலையும் நாம் ஏன் சூத்திரன், பஞ்சமன்" என்றோம்? "சாஸ்திரமும் வேதமும் அதைத்தானே கூறுகிறது" என்றார்கள். "அப்படிப்பட்ட சாஸ்திரமும் வேதமும் தேவையற்றது,' என்கிறோம்.

"கீதையிலே, நான்கு ஜாதிகளையும் நான்தான் உலக நன்மைக்காக வகுத்தேன் என்று கண்ணன் கூறுவதாக இருக்கிறதே" என்றார்கள் "அத்தகைய கீதையையும் கண்ணனையும் ஒதுக்கித் தள்ளுங்கள்" என்றோம்:

"இழிந்த ஜாதியில் பிறந்து இடர்பட வேண்டும் என்பது வேதன் விதித்த 'விதி' அல்லவா?" என்றார்கள்- "அந்த வேதனையும் ஒரு கை பார்க்கிறோம்" என்றோம்.

"நாம் திராவிட இனம்" என்றோம். சான்று கேட்டார்கள். சரித்திரத்தைச் சான்று காட்டினோம்.

"நம் நாடு ஏன் சுரண்டப்பட வேண்டும்" என்றோம். "எப்படி?" என்னார்கள். வடநாட்டு டாட்டா டால்மியா சேத்சந்துகளின் கொள்ளையைக் காட்டினோம்.

"திருக்குறளைப் படியுங்கள். அது திராவிட நாட்டின் நல்லாட்சிக்கு வழி வகுக்கும். அதுதான் நம் நாட்டின் ஒழுக்க நூல்" என்றோம்.

"இராமாயணம்?" என்றனர். "தமிழரசனை அரக்கனாக்கி ஆரிய இராமனை கடவுளும் ஆக்கி அவர்களுக்கு அடிமையாவதற்கும் வழி செய்த ஏடல்லவா?" என்று விளக்கினோம்.

"மகாபாரதம்" என்று கேட்டனர், பெயரைக் கேட்டாலே வாந்தி வருகிறதே என்று ஆதாரத்தோடு கூறினோம்.

ஏன் குறிப்பிட்ட ஒருவகுப்பாரே 1-க்கு 80 வீதத்திற்கு மேல் உத்தியோகங்களைக் கைப்பற்றினார்கள்" என்று கேட்டோம் "மக்கள் திகைத்தனர்"

"இந்நாட்டிலுள்ள கோயில்களை கட்ட பணம் கொடுத்தது திராவிடன்! எங்கோ மலைகளிலே உள்ள கற்களைக் கொண்டு வந்து தன் உழைப்பினால் செதுக்கிச் சிலையாக்கியவன் உயிரையே பொருட்படுத்தாமல் வானளாவிய கோபுரங்களைக் கட்டியவன் திராவிடன். கடைசியிலே கோயில் கட்டி கும்பாபிசேகம் செய்ய பணம் கொடுத்ததும் திராவிடன் மானியம் விட்டதும் அவனே- ஆனால் இவ்வளவும் செய்தான பிறகு மூலஸ்தானத்திற்குள்ளே நாம் சென்றால் தீட்டு. ஆகவே நாம் வெளியிலே கைக்கட்டி நிற்பதும் கோயிலில் பார்ப்பனர்கள் ஆதிக்கம் செலுத்துவதும் ஏன்? இது அடுக்குமா" என்றோம்?

"மக்கள் மௌனியானார்கள்"

"நாட்டு மக்கள் இருக்க இடமின்றி உடுக்க உடையின்றி உண்ண உணவின்றி தவிக்கையில்; அரங்கநாத பெருமானுக்கு வைரமுடியும் தில்லைவாழ் நடராசனுக்கு பொற்கூரையும் ஏன்? அதன் பேரால் சுரண்டிப் பிழைக்கும் கூட்டத்திற்கு அதில் ஆதிக்கம் ஏன்?" என்று கேட்டோம்.

"ஐயோ! கடவுள் வேண்டாமா?' என்றனர்.

"தேவைதான் ஆனால் கல்லல்ல கடவுள். சாதியை நிலைநாட்டுவது அல்ல கடவுள். மக்களை மனிதனாக மதித்து நடக்கும் கடவுள்- ஒழுக்கமுடைய கடவுள்-இவைகள்தான் கடவுளாக இருக்கமுடியுமேதவிர இரண்டுபெண்டாட்டியுடைய கடவுளும்-60000 கோபிகளுடன் லீலைகள் பல புரிந்த கடவுளும்-பிறன் மனைவியை பெண்டாள நினைக்கிற கடவுளும் நமக்குத் தேவையில்லை. அப்படிப்பட்ட கடவுளை இருக்கவிட முடியாது என்றோம்-

இவ்வித மூடப்பழக்கங்களைத் தகர்க்கும்போதுதான் தங்கள் வாழ்வு இருண்டுவிடுமே, தங்கள் ஆதிக்கத்தின் அடிப்படை ஆட்டங்கண்டு ஆடுகிறதே என்று பார்ப்பனக்கூட்டம் பதறுகிறது, பதறுவதோடல்லாமல் நம்மேல் சீறி விழுகிறது. நம்மவரையே நம்மேல் ஏவிவிடப் பார்க்கிறது- எத்தனை நாட்களுக்கு இம்முறை பயன்

இத்தகைய காரணங்களை உணராது நம்மீது பழி சுமத்துகிறார்கள் தெளிவில்லாத நெஞ்சத்தவர், நாம் அடையவேண்டி குறிக்கோளுக்கு இடையூறு செய்பவர்களைக் கண்டிக்கிறோமே ஒழிய யார்மீதும் "துவேஷங்" கொண்டல் உழவன் பயிரிலுள்ள களை யை நீக்குவது போல, இதை உணராமல் 'பார்ப்பனர்மீது ஏன் துவேஷம் உங்களுக்கு" என்று நம்மை கேள்வி கேட்கிறார் கேள்வி?

2-ம் பக்கம் தொடர்ச்சி

விட நாட்டு மக்கள் மலேயா, சிங்கப்பூர், சிலோன், முதலிய இடங்களுக்குச்சென்று தேயிலை தோட்டத்தில் எலும்புருக பாடுபட்டு வயிறு வளர்க்கிறார்களே அவர்களை நம் நாட்டில் வாழச் செய்ய முடியாதா? வடநாட்டுப் பணியாக்களையும் பார்ப்பனர்களையும் இங்கிருந்து விரட்டினால், நம் நாட்டு தோழர்களை வாழவைக்க முடியும். திராவிட நாடடைப் பிரித்தால் வாழவை கயில்லையா? இன்னாட்டில் என்ன வளம் இல்லை? வடநாட்டிலாவது பாலை வனம் உண்டு இங்கு அதுவுமில்லை. முத்துக் குளிக்கும் குமரித்துறையை பெற்றது நம் திராவிட நாடு. கனிகள் வெட்டியெடுக்கும் சுரங்கங்களும் வற்றாத ஆறுகளும், வளமுள்ள சோலைகளும், வேய்நிலை மலைகளும் விளைநிலங்களும் நிறைந்தது நம் திராவிட நாடு. எல்லா வசதிகளும் பெற்ற நாம் ஏன் திராவிடத்தனியரசு அமைக்க முடியாது? நம் தேசியத்தோழர்கள் நாட்டைப் பிரிக்கக்கூடாது இந்தியா ஒரேநாடாகத்தான் இருக்கவேண்டும் என்று கதறுகின்றனரே! பாரதத்தாயை ஐக்கிய இந்தியாவை பாக்கிஸ்தானுக்கு ஏன் பங்கு போட்டுக் கொடுத்தீர்கள்? பாரதத்தாய் என்று ஒன்றாயிருந்தாள்? ஆங்கிலேயன் ஆட்சிக்கு முன் இந்தியா ஒன்றாகவே தான் இருந்ததா?

இந்தியா என்ற பெயர் எக்காலத்தில் யாரால் கொடுக்கப்பட்டது? எந்த தேசியத் தோழர்களாவது இதற்குச் சரித்திரத்தில் சான்று காட்ட முடியமா? இல்லாத ஒன்றை இருப்பதாக எண்ணிக் கொள்வது எப்படிப் பொருத்தமாகும்.

நந்தமிழ் திராவிட மக்களே! மேல் கண்ட பிடியிலிருந்து விடுபட்டு திராவிடம் தன்னாட்சி பெற வேண்டும் என்ற ஒரே நோக்கத்திற்காக அரும்பாடு பட்டு வரும் நம் தென்னாட்டின் **லெனின்**, திராவிடத்தில் ஒப்புயர்வற்ற தந்தை **பெரியார்**, அவர்கள் காட்டும் வழியில் சென்று பெறுவோம் லட்சியத்தை! அமைப்போம் திராவிடத்தனியரசை!!

குறும்புக் கேள்வி

பிறர்மேல் கடுப்புக்கொண்டு, இதை வைத்தே பிழைத்துத் திரியும் தனிப்பட்ட பேர்வழிகளோடு வழக்காடவோ வம்பாடவோ, போராடுதல் முதலிய சில்லரைச் செயலுள் இறங்கவோ எமக்கு எவ்வகையான விருப்பமும் இல்லை. ஆனால் பாராளு மன்றத்து மேலவையின் உறுப்பினர் ஒருவர் குறிப்பிட்ட சிறு சொற்கள் எம்சுவைக்கும் ஒத்துக்கொள்ளவில்லை; அவைக்கும் பொருந்தவில்லை. அவை மலிந்த புகழை எளிய வழியில் வலிந்து எய்தும் மனப்பான்மையைக் குறிப்பனவாகும், இவற்றால் மேலவையின் மேன்மைத் தன்மைக்கும் இழிவு ஏற்பட்டுவிட்டது. இத்தகைய பேச்சுக்களாலும் குறிப்புக்களாலும் ஏற்பட்ட பண்பாட்டுக் குறைபாட்டை நாணயமிக்க உறுப்பினர்கள் மும்முரமாக எண்ணிப்பார்க்க வேண்டியிருக்கிறது. நாணயமுள்ள உறுப்பினர் ஒருவர் கண்ணியம்படைத்த அமைச்சர் உயர்திரு சீத்தாராம ரெட்டியாரிடம் ஒரு கேள்வி கேட்டார். அது பார்வைக்கு மாசற்றதாகத் தென்பட்டது. அதற்கு அமைச்சர் அவர்கள் அளித்த விடையும் அந்த வாய்ப்புக்குமிகவும் பொருத்தமானதாகவும் இருந்தது. எந்த உறுப்பினருக்கும் கேள்வி கேட்கும் உரிமை இருக்கத்தான் செய்கின்றது. ஆனால் அந்த உரிமை (ஏகபோகமானதல்ல) தட்டிக் கேட்குந் தன்மையற்றதல்ல. மேலும் அது பொது மக்களுக்கு நன்மை பயப்பதாக இருக்க வேண்டும். இது எல்லாருந் தெரிந்து ஒப்புக்கொள்ளும் உண்மை. கேள்வி கேட்பதற்குச் சரியான திடமான, அடிப்படையும் இருக்க வேண்டும். மற்றப்படி கெட்ட எண்ணமும், குழப்பிய கற்பனையுங் கொண்டு, விளையாடலில் உறுப்பினர்கள் ஈடுபட்டுவிடவும் கூடாது. திருவாளர் ஆதித்தன் அமைச்சரிடம் கேட்கிறார்: "திராவிடக் கழகத் தலைவர் தமக்கு நிலங்கொடுக்கும்படி ஆட்சியாளருக்கு விண்ணப்பம் செய்ததுண்டா?" நாணயமிக்க அமைச்சர் உயர்திரு சீத்தாராம ரெட்டியார் அவர்கள் அதைப் பற்றித் தமக்கொன்றும் தெரியாது என்று விடையளித்து "அரசியல் தியாகி என்ற இலக்கணத்துடன் பொருந்தியவராயின் அப்படிக் கேட்பதில் யாதொரு குற்றமுமில்லையே," என்று குறிப்பிட்டார். எப்படியானாலும் சரி எது கிடைத்தாலும் சரி அதை வைத்துத் தம் அரசியல் எதிரியைத் தாக்கி எளிய முறையில் பேரெடுக்க விரும்பும் மேதாவியான இத்தகைய பேர்வழிகளை மேலவைத் தலைவர் உயர்திரு இராமகிருஷ்ண இராஜா மடக்கி நிறுத்தி மரியாதை செய்வது பெரிதும் விரும்பத்தக்கதாகும். மட்டமான திருப்தியடையும் ஒரு கேவலமான இன்பத்துக்காக இத்தகைய உறுப்பினர்கள் பொருப்பற்றமுறையில் தனிப்பட்டவர்களின் மானத்தைப் போக்க விட்டுவைப்பது கடுமையாகக் கண்டிக்க வேண்டிய தொன்றாகும்.

திராவிடக் கழகத் தலைவரான பெரியார் உயர்திரு ஈ. வி. ராமசாமி அவர்கள் ஆளவந்தார்களிடம் உதவி வேண்டி எக்காலத்தும் விண்ணப்பம் செய்ததுமில்லை. நிலங்கேட்கவுமில்லை. இந்த உயர்திரு ஆதித்தனவர்கள் மாத்திரமல்ல! இந்த மாகாணத்திலுள்ள எவரும் இதை அறிவார்கள். நம்நாட்டின் புகழ்பெற்ற பெருமகனான பெரியார் அவர்கள் ஆளவந்தார்களிடம் இருந்து நிலம் பெறக் கனவிலும் கருத மாட்டார். வேறு நலம்பெற ஒத்துக்கொள்ளவுமாட்டார். நம் நாட்டுக்கு அவர் செய்திருக்கும் நன்மைகளை நண்பர்களும் பகைவர்களும் ஒருங்கே உணர வேண்டும். நமது சட்டசபையிலுள்ள பொறுப்புள்ள உறுப்பினர் எவரும் உண்மையில் அடிப்படையற்ற வம்பான கேள்விகளை கேட்கவுங்கூடாது. ஆனால் பொது வாழ்க்கை ஒருங்குகளுக்குள்ள கட்டுப்பாடுகளைக் காப்பாற்றி வைக்குங்கடமை இருக்கின்றது என்பதைக் கண்டுணராது சின்னஞ் சிறு குத்தலிலும், சிறு சொல் சொல்லும் செயலிலும் ஈடுபடும் சில நாணயமுள்ள உறுப்பினர்களும் சட்டசபையில் இருக்கிறார்கள் என்பதை மறந்து போகிறோம், இத்தகைய சில்லரைத் தாக்குதல்கள் பெரியார் இராமசாமி அவர்களின் பெருமையையும் புகழையும் தாக்கி விடாது. மேலவை உறுப்பினருள் சிலர் சொல்லிய துடுக்கான சொற்களால் பெரியாரின் புகழ் ஒளி எள்ளளவும் மங்கி விடாது. ஞாயிறை பார்த்து......குரைத்தால் என்ன நடக்கும்? இத்தகைய கேள்வி அமைச்சரிடம் கேட்டதின் காரணமென்ன என்று உயர்திரு ஆதித்தன் அவர்களை அறைகூவிக் கேட்கின்றோம்? ஏன் இப்படிச் செய்கின்றோம்? என்றால் குடியாட்சி முறையில் சட்டசபையானது மிக்ககண்ணியம் படைத்ததாக எண்ணப்பட வேண்டும்; அதன் ஒழுக்கம் உறைசலுக்கு எந்தவகையான குறையையும் எவரும் உண்டாக்க விடவும் மாட்டோம். என்ற கொள்கை எமக்குண்டு என்பதனால் தான். குறிப்பிடத் தகுதியற்ற காரணமில்லாக் காரணங்காட்டி தலைவர் இராமசாமிப் பெரியாரைத் தாக்கியதானது பொது மக்கள் வாழ்க்கையின் முற்போக்கான சீரழிவுக்கு இடங்கொடுக்கும். ஒவ்வொருவரும் தத்தமக்குள்ள கருத்துக் கொள்ள உரிமை இருக்கட்டும் ஆனால் அந்த உரிமை மேலவை உறுப்பினராயிருக்கும் உரிமை எவரையும் கண்டபடி பேசும் தட்டிக் கேட்க முடியாத உரிமையை அளித்து இருக்கிறது என்று எண்ணுவல் இருக்கட்டும். பொது வாழ்க்கையைப் பொறுத்த சிக்கல்களைப் பற்றிக் கலந்து கொள்வதற்கும் பொது இடமாக அமைந்தது மேலவையாகும். மேலவைத் தலைவரும் மற்றும் உள்ள உறுப்பினரும் உயர்திரு ஆதித்தன் அவர்கள் போலுள்ள ஏனைய உறுப்பினர்கள் இத்தகைய கேள்விகளைக் கிளப்பினால் தங்கள் முகத்தைச் சுழியாதிருக்க மாட்டார்கள் என்று நம்புகிறோம். ஏனெனில் இவர்கள் இந்நிலையில் என்ன செய்கிறார்கள் என்பதைப் பொதுமக்கள் கூர்ந்து நோக்குவார்கள் என்று அழுத்தமாக எடுத்துக்கூற விரும்புகிறோம்.

—(லிபரேட்டர், 9-3-49)

Edited and Published by B. Ranganatham. Mg. Editor R. Rajagopal 33 Thiruvengada Mudali Street, Periamet, Madras 3. Printed by J. A. SILVIA at the "LIBERATOR" Press, 2-11, Mount Road, Madras 2.